KDK
SINCE 1909
JAPAN
CUSTOM AIR
EXPERIENCE
(011) 250 0823



# தமிழன்
THAMILAN தமிலன்
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர்: 05, இதழ்: 147 குரோதி வருடம், தை மாதம் 01ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
(14.01.2025) ஹிஜ்ரி 1446, ரஜப் - 13, 0115 886187 - விலை ரூ.40 பக்கங்கள் 16



KDK
SINCE 1909
JAPAN
CUSTOM AIR
EXPERIENCE
(011) 250 0823




## ‘தமிழன்’ வாசகர்கள், விளம்பரதாரர்களுக்கு இனிய தைத்திருநாள் வாழ்த்துகள்...



படப்பிடிப்பு: இஷான் சஞ்சீவ

**தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு களைகட்டிய தலைநகர்...**


Amritha
மனம் மகிழட்டும் நறுமணத்தால்
தமிழன்
உடன்
திருப்பதி புனித யாத்திரை

» 03 பக்கம்

# சுபமான ஆரம்பத்துக்கு பொங்கல் ஆசீர்வாதம்

## ஜனாதிபதி அநுரகுமார தைப்பொங்கல் வாழ்த்து



சுபமான ஆரம்பத்துக்கு இந்தப் பொங்கல் கொண்டாட்டம் பாரிய ஆசீர்வாதமாக அமைய வேண்டுமென்று பிரார்த்திப்பதாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தனது பொங்கல் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். » 02 பக்கம்

# தேசிய விழாவாக தைப்பொங்கல்

## ஒன்றிணைந்து கொண்டாட சஜித் பிரேமதாச அழைப்பு



விவசாய சமூகத்துக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டிருந்த இந்த விழா, இன்று இன, மத வேறுபாடுகளைக் கடந்து அனைத்து தமிழ் மக்களின் தேசிய விழாவாக மாறியுள்ளதாக... » 02 பக்கம்


இனிய தைப்பொங்கல் திருநாள் நல்வாழ்த்துகள்



மயில்வாகனம் உதயகுமார்
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்
தமிழ் முற்போக்கு கூட்டணி

தித்திக்கும் பொங்கல் திருநாள்
அதிகாலை உதயமாகும் கதிரவனின்
திருநாள்
அழகான பொங்கல் திருநாள்
அச்சு வெல்லம்
பச்சரிசி சுவை நாள்
புதுப்பானை பொங்கும் திருநாள் உழவனின்
பெருநாள்
உழைக்கும் கரங்களின் திருநாள்
தமிழரின் திருநாள்
தரணியெங்கும் பெருநாள்
இனிக்கும் கரும்பு சுவையால்
மஞ்சளின் மணநாள்
மங்கலம் பொங்கும் திருநாள்
உறவுகள் கூடும் திருநாள்
பொங்கும் பொங்கல்
திருநாள்
தை மகளின் பெருநாள்
தமிழ் மகளின் திருநாள்


# ஐ.ம.சக்தியினர் ரணிலிடம் சரணடையலாம்

## எச்சரிக்கிறார் ஹிருணிக்கா



*நா. தினுஷா*

“ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவின் தலைமைத்துவப் பண்புகளை மாற்றிக்கொண்டு, அவரிடமுள்ள குறைபாடுகளை நிவர்த்தித்துக்கொண்டு உடனடி யாக கட்சி மறுசீரமைப்பு நடவடிக்கைகளை ஆரம்பிக்காவிட் டால் தற்போது கட்சியிலுள்ள சகலரும் விரைவில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைய நேரிடும்” - என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிக்கா பிரேமச்சந்திர எச்சரிக்கை விடுத்துள்ளார். 02 பக்கம்

# கடத்தப்பட்ட மாணவி அம்பாறையில் மீட்பு



» 02பக்கம்




2025 ஆம் ஆண்டுக்கான பஞ்சாங்கம் இன்றைய பத்திரிகையில்...


நண்பர்கள் அன்பர்கள் அனைவருக்கும்
இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துகள்



நவநாகரீக ஜவுளி உலகின் ஜனரஞ்சகமான பெயர்
LAC Little ASIA
EMPORIUM(PVT)LTD Ultimate destination for Wedding Sarees, Shalwars&Readymade Garments
317,317A,Galle Road, Wellawatta,Colombo,Srilanka
Tel:+94112504470 +94112500098
0762122655 info@littleasia.lk www.littleasia.lk

இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துகள்
A BAMBALAPITIYA PHARMACY(PVT)LTD
PHARMACY&GROCERY
ISLAND WIDE HOME DELIVERY&OVERSEAS DELIVERY FACILITY AVAILABLE
No.23,Station Road, Bambalapitiya, Colombo-04
011 2591833/011 2591822 0777 642368



## சுபமான ஆரம்பத்துக்கு...

அவர் மேலும் கூறியிருப்பதாவது,

"அறுவடைத் திருநாள்" என்று பொருள்படும் தைப்பொங்கல், உலகம் முழுவதுமுள்ள தமிழர்கள் மற்றும் இந்துக்களால் மிகுந்த பக்தியுடன் கொண்டாடப்படுகிறது. நிறைவான அறுவடைக்குப் பங்களித்த சூரியன், பூமி, மழை மற்றும் பசுக்கள், உபகரணங்களுக்கு நன்றி செலுத்துவது இந்த நாளின் சிறப்பம்சமாகும். இந்த விழா 'தை'மாதத்தின் முதல் நாளில் கொண்டாடப்படுகிறது. சூரியனின் வடக்கு நோக்கிச் செல்லும் உத்தராயணம், தைப்பொங்கல் நாளில் தொடங்குகிறது.

புதிய திசையை நோக்கிச் செல்லல், மனித சமூகத்தின் உள்ளக-வெளிப்புற சகவாழ்வு என்பனவே தைப்பொங்கல் பண்டிகையின் அர்த்தமாகும்.

இந்த நாட்டு மக்களின் நற்பண்புகள், நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு என்பவற்றை மேம்படுத்தி சமூக மாற்றத்துக்கான ஆரம்ப முயற்சியாகவும் சுற்றுச்சூழல் மற்றும் நெறிமுறைக் கான புதிய ஒரு திசையின் தொடக்கமாகவும் கிளீன் ஸ்ரீ லங்கா திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ள , தைப்பொங்கல் பண்டிகையைக் கொண்டாடுவது மகிழ்ச்சியளிக்கிறது. வரலாற்று ரீதியாக வேரூன்றிய ஆசிய மரபுகளில் மனிதனுக்கும் சுற்றுச்சூழலுக்குமிடையிலான பிணைப்பு பிரிக்க முடியாதது. தைப்பொங்கல் தினத்தால் வெளிப்படுத்தப்படும் அந்த மரபுகள் இந்தத் திட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

அதேபோல், தைப்பொங்கல் கொண்டாட்டம் மக்களின் கலாசார வாழ்வில் புதிய நம்பிக்கைகளை கட்டியெழுப்புகிறது. நாட்டில் உருவாகியுள்ள புதிய உத்வேகத்துடன், இலங்கையர்களாகிய நம் அனைவருக்கும், "அழகான வாழ்க்கை" என்ற நம்பிக்கையை நம் இதயங்களில் சுமந்து, புத்தாண்டில் புதிய உற்சாகத்துடன் முன்னோக்கிக் கொண்டுசெல்லும் வாய்ப்புக் கிடைத்துள்ளது. அதற்காக சுற்றுச்சூழல் முன்னேற்றத்துக்கு உகந்த முன்னுரிமை அளிக்கும் ஒரு புதிய கலாசார நெறிமுறை இருப்பை உருவாக்குவதன் மூலம் நிலையான அமைதி, நல்லிணக்கம் என்பவற்றை மேம்படுத்துவதற்குத் தேவையான கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் தலைமைப் பொறுப்பு மற்றும் பொறுப்புக்கூறலை நாங்கள் ஏற்கிறோம்.

நாட்டுக்கும் மக்களுக்கும் பல நல்ல விடயங் களை நிறைவேற்ற உறுதிபூண்டு நாட்டின் பொறுப்பை ஏற்றுக்கொண்ட நாங்கள், அந்த வாக்குறுதிகளைத் தடைகளுக்கு மத்தியிலும் பின்வாங்காத துணிச்சலுடனும் அசைக்க முடியாத உறுதியுடனும் நிறைவேற்ற உறுதிபூண் டுள்ளோம். இந்த நாட்டு மக்களின் முகங்களில் நீடித்த புன்னகையைக் கொண்டுவருவதை நோக்கமாகக்கொண்ட இந்தச் செயற்பாட்டில் புதிய அணுகுமுறைகளுடன், ஒற்றுமையுடனும் பங்கேற்புடனும் ஒன்றிணைய உங்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறேன். சுபமான ஆரம்பத்துக்கு இந்தப் பொங்கல் கொண்டாட்டம் பாரிய ஆசீர்வாதமாக அமைய வேண்டுமென்று நான் பிரார்த்திக்கிறேன்.

இலங்கை மற்றும் உலகளாவிய இந்துக்கள் அனைவருக்கும் நல்லிணக்கம் மற்றும் நன்றியுணர்வு நிறைந்த, வளமான மற்றும் மகிழ்ச்சியான தைப்பொங்கல் திருநாள் நல்வாழ்த்துகள்!

## தேசிய விழாவாக...

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தனது தைப்பொங்கல் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

தைப்பொங்கல் என்கிற அறுவடைத் திருவிழா உலகெங்கிலுமுள்ள தமிழ் மக்களால் கொண் டாடப்படும் கலாசார முக்கியத்துவம் வாய்ந்த விழாவாகும். மரபு ரீதியாக அறுவடைக் காலத்தில் கொண்டாடப்படும் இந்த விழா நன்றியுணர்வு மற்றும் செழிப்புடன் தொடர்புடையது. தைப்பொங்கலின் உண்மையான பொருளை புரிந்துகொள்வது மிகவும் முக்கியமானது.

விவசாய வாழ்க்கை முறையில் ஒருவரின் பொருளாதாரத்தையும் வாழ்க்கையையும் வலுப்படுத்தி, பயிர்களைச் செழிப்பாக்க உதவிய சூரியன், மழை, இயற்கை மற்றும் கால்நடைகளுக்கு நன்றி தெரிவிக்கப்படுகிறது. இதன்மூலம், நன்றி செலுத்துதல் என்ற பெரிய பாடம் கற்பிக்கப்படுகிறது. இதனை எதிர்கால சமுதாயத்தில் முறையாக உள்வாங்குவது நமது பொறுப்பாகும்.

ஒரு நாட்டின் மக்களுக்கான பொறுப்பை ஏற்றுள்ள ஆளும் கட்சி, பொதுமக்களின் பொறுப்புகளை நிறைவேற்றுவதென்பது அந்த அதிகாரத்தை வழங்கிய மக்களுக்கு செலுத்தப்படும் நன்றி மற்றும் பொறுப்புணர்வின் வெளிப்பாடாகும் என்பதை தைப்பொங்கல் விழாவின் உட்பொருளைச் சரியாகப் புரிந்துகொள் வதன்மூலம் உணரலாம்.

ஆரம்பத்தில் விவசாய சமூகத்துக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டிருந்த இந்த விழா, இன்று இன, மத வேறுபாடுகளைக் கடந்து அனைத்து தமிழ் மக்களினதும் தேசிய விழாவாக மாறியுள்ளது.

பல்மத, பல்லின, பல்மொழி சமூகம் கொண்ட நமது தாய்நாட்டில் பன்முகத்தன்மையில் ஒற்றுமையை ஊக்குவிக்கும் மற்றொரு தேசிய விழாவாக தைப்பொங்கல் விழாவை ஒன்றிணைந்து கொண்டாடுவது நமது கலாசார பாரம்பரியத்தைப் பாதுகாக்க உதவும்.

ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலான வரலாற் றைக்கொண்ட தைப்பொங்கல் விழாவைக் கொண்டாடும் இலங்கைவாழ் சகோதர சகோதரிகளுக்குப் பெரும் மகிழ்ச்சியுடன் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துகள்!

# வவுனியாவில் களைகட்டிய பொங்கல் வியாபாரம்

உழவர் திருநாளாம் தைப்பொங்கல் தினத்தைக் கொண்டாடுவதற்கு மக்கள் தயாராகிய நிலையில் நேற்று வவுனியாவில் பொங்கல் வியாபாரம் களைகட்டியது.

இன்று செவ்வாய்க்கிழமை உழவர் தினமான தை முதலாம் திகதி பிறந்துள்ள நிலையில், தை பிறந்தால் வழிபிறக்கும் என்ற வாக்குக்கிணங்க தைப்பொங்கலை மக்கள் சிறப்பாகக் கொண்டாடவுள்ளனர்.

கடந்த வருடத்தை விட இம்முறை மக்கள் அதிக ஆர்வத்துடன் பொங்கல் பொருட்களைக் கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டியதாக வவுனியா வர்த்தகர்கள் தெரிவித்தனர்.





# தைத்திருநாளை முன்னிட்டு நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் விசேட பூஜை



*விஜயரத்தினம் சரவணன்*

ஆக்கிரமிப்பு முற்றுகைக்குள் இருக்கும் முல்லைத்தீவு - பழையசெம்மலை, நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் தைத்திருநாள் விசேட பூசை வழிபாடுகள் நேற்று இடம்பெற்றன.

இந்த விசேட பூசை வழிபாடுகளில் வன்னி மாவட்ட பாரா ளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பங்கேற்றிருந்தார்.

இந்நிலையில் நீராவியடிப் பிள்ளையாருக்கு விசேட அபிஷேக பூசைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், பிள்ளையாருக்கு குழை சோறு படையலிட்டு வழிபாடுகள் இடம்பெற்றன.

இந்த வழிபாடுகளில் செம்மலை மற்றும் செம்மலை கிழக்கு கிராம மக்கள், அடியவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர். கடந்த காலங்களில் குறித்த நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தை ஆக்கிரமிப்புச் செய்வதற்கு பெரும்பான்மையினத்தைச் சேர்ந்தவர்கள் முயற்சிகளை மேற்கொண்டதுடன், இவ்வாலயத்தில் தமிழ் மக்கள் வழிபாடுகளை மேற்கொள்வதற்குப் பல்வேறு இடையூறுகளையும் ஏற்படுத்தியிருந்தனர்.

இந்நிலையில், ஆலய நிர்வாகத்தினர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் ஆகியோரின் தொடர் போராட்டத்தால் நீதிமன்ற உத்தரவுக்கமைய தற்போது தமிழ் மக்கள் இவ்வாலயத்தில் வழிபாடுகளை மேற்கொண்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஐ.ம.சக்தியினர்...

கொழும்பில் வைத்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஒன்றிணையவேண்டும் என்ற நிலைப்பாடு இருக்கிறது. இந்த யோசனையை ஒருசிலர் விரும்புகிறார்கள். வேறு சிலருக்கு அதில் விருப்பம் இல்லை. இதுதொடர்பில் சஜித் பிரேமதாச தீர்மானம் எடுக்கவேண்டும். கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கட்சியை மறுசீரமைத்து, அவரிடமுள்ள ஒருசில குறைபாடுகளை நிவர்த்திசெய்து பயணிக்காவிட்டால் ஐக்கிய மக்கள் சக்தியிலிருக்கும் அநேகமானவர்கள் சஜித்தை கைவிட்டு ரணில் விக்கிரமசிங்கவிடம் செல்வார்கள். எனக்கு அவ்வாறானதொரு எதிர்பார்ப்பு இல்லை.

தொடர்ந்து இந்தக் கட்சியில் அங்கத்துவம் வகிக்கவே எதிர்பார்க்கிறேன்.

ஏனென்றால், புதிதாக உருவாக்கப்பட்ட இந்தக் கட்சிக்குள் எனக்கு பாரிய பொறுப்பிருக்கிறது. தொலைபேசி சின்னத்துக்கு வாக்களித்த மக்களின் வாக்குகளே எனக்குக் கிடைத்துள்ளன. தலைமைத்துவம் தீர்மானித்தால், இரு கட்சிகளும் இணைந்து செயற்படுவது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவோம். இருந்தபோதும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்படவேண்டும் என்ற விடயத்தில் ஒருசிலர் இணக்கத்துடனும் இன்னும் சிலர் அதற்கு மறுப்புத் தெரிவிக்கும் நிலைப்பாட்டிலுமே இருக்கிறார்கள்.

எனவே, சஜித் பிரேமதாச தொடர்ந்து கட்சி மறுசீரமைப்பு நடவடிக்கைகளை உடனடியாக முன்னெடுக்காவிட்டால் இறுதியில் கட்சியின் சகல உறுப்பினர்களும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையவேண்டும் என்ற நிலைப்பாட்டுக்கு வந்துவிடுவார்கள். சஜித் பிரேமதாசவின் தலைமைத்துவத்துக்கு விருப்பம் தெரிவித்து வந்தவர்களே தற்போது ஐக்கிய மக்கள் சக்திக்குள் இருக்கின்றோம்.

அவர் மாற்றமடைந்து, அவரின் தலைமைப் பண்புகளையும் மாற்றிக்கொண்டு குறைந்தபட்சம் பணிசெய்யக்கூடியவர்களை இணைத்துக்கொண்டு இந்தப் பயணத்தை மேற்கொண்டால் யாருடனும் இணையவேண்டிய அவசியமில்லை. எனவே, அவரே இறுதித் தீர்மானத்தை எடுக்கவேண்டும்"- என்றார்.

## கடத்தப்பட்ட மாணவி...

*பாறூக் ஷிஹான்*

கண்டி, கெலிஓயா பிரதேசத்தில் பாத்திமா ஹமிரா என்ற 18 வயது பாடசாலை மாணவியைக் கடத்தி 50 இலட்சம் ரூபா கப்பம் கோரிய 31 வயதுடைய மொஹமட் நாசர் பாடசாலை மாணவியுடன் அம்பாறை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கண்டிக்கு நேற்று (13) காலை புறப்படவிருந்த சொகுசு பஸ்ஸிலிருந்தபோது கடத்திச் சென்ற நபரையும் குறித்த மாணவியையும் பொலிஸார் கண்டுபிடித்தனர் .

அம்பாறை பகுதியிலுள்ள தனியார் விடுதியொன்றில் நேற்றுமுன்தினம் (12) இருவரும் இருந்ததாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில், இளைஞன் கைதுசெய்யப் பட்டுள்ள நிலையில், மாணவியிடம் பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர்.

மேலும், தாயின் தம்பியான தனது மாமாவின் மகளையே இவ்வாறு அழைத்து வந்ததாக குறித்த கடத்தலை நடத்திய இளைஞன் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இரண்டு வருடங்களுக்கும் மேலாக ஜப்பானில் பணிபுரிந்ததாகவும் மாமாவிடம் தனது பணம் கொடுக்கப்பட்டதாகவும் பணத்தை தராததால்தான் இதுபோன்ற நடவடிக்கை எடுத்ததாகவும் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் கூறியுள்ளார்.

இதேவேளை, கடத்தப்பட்ட பாடசாலை மாணவி மருத்துவ பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளார். பொலிஸ் விசாரணைகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.







# சிறைச்சாலைகள் திணைக்களம் வெற்றி



**தமிழன் நவா**

இலங்கை சோட்டோக்கான் கராத்தே சங்கத்தினரால் கடந்த சனிக்கிழமை (11)அன்று கொழும்பு ரோயல் மாஸ்க் அரேனா உள்ளக அரங்கில் நடத்தப்பட்ட தேசிய மட்டத்திலான கராத்தே சுற்றுப்போட்டியில் பல மாவட்டங்களில் இருந்தும் பல கழகங்கள், தனிநபர்கள் என பலர் கலந்து கொண்ட போதிலும் இம்முறை வரலாற்றில் முதன்முதலாக சிறைச்சாலை திணைக்களத்தை மையப்படுத்திய வீரர்களும் இப்போட்டியில் பங்கு பெற தகைமை பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

முன்னிலையாகியிருந்த 09 வீரர்களும் தலா மூன்று தங்கம், மூன்று வெள்ளி, மூன்று வெண்கலம் என ஒன்பது பதக்கங்களைப் பெற்று சிறைச்சாலை திணைக்களத்துக்கு பெருமை சேர்த்துள்ளனர். இதற்காக தனது முழு அர்ப்பணிப்பையும் வழங்கிய சிறைச்சாலை அத்தியட்சகர் நல்லையா பிரபாகரன் (பிரதான பயிற்றுவிப்பாளர்) மற்றும் சிறைச்சாலை உத்தியோகத்தர் தேவகாந்தன் பிரசாத் (பயிற்றுவிப்பாளர்) ஆகியோருக்கு தமது நன்றிகளை சிறைச்சாலை சக பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# இடைத்தரகர்களிடமிருந்து காப்பாற்றப்படவேண்டும்!

## விவசாயிகள் தொடர்பில் வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

**(பு.கஜிந்தன்)**





இடைத்தரகர்களிடமிருந்து விவசாயிகள் காப்பாற்றப்படவேண்டும். விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களுக்கு நியாயமான சந்தைவிலை கிடைக்கவேண்டும். அதற்கு ஏற்றவகையில் பொருளாதார மத்திய நிலையங்களை இந்த ஆண்டு மீளத் திறப்பதற்கு திட்டமிட்டு வருகின்றோம் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

மறவன்புலவு கமக்கார அமைப்பின் ஏற்பாட்டில் நெல் அறுவடை விழாவும் கமக்காரர் கௌரவிப்பு நிகழ்வும் மறவன்புலவு சகலகலாவல்லி வித்தியாலயத்தில் நேற்று திங்கட்கிழமை காலை (13) இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஆளுநர் மேலும் தெரிவிக்கையில், தற்போதைய காலநிலை மாற்றம் விவசாயிகளுக்கு பெரும் சவாலாக மாறியிருக்கின்றது. முன்னைய காலங்களில் நெல் அறுவடையின்போது மழை பெய்வதில்லை. ஆனால் இப்போது மழையின் பாதிப்பை நாம் எதிர்கொண்டிருக்கின்றோம். கடந்த ஆண்டு நவம்பர் மாதம் ஒரு சில நாள்களுக்குள் கடும் மழை பெய்தபோதும் தெய்வாதீனமாக மிகப் பெரியளவு நெல் அழிவு ஏற்படவில்லை. அந்த மழை மற்றும் இப்போதும் பெய்யும் மழை என்பனவற்றால் உங்களின் வயல் நிலங்கள் ஈரலிப்பாக உள்ளன. எனவே இதை விவசாயிகள் சாதகமாக பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

நெல் அறுவடை முடிந்த பின்னர் சிறுதானியங்களை பயிரிடுங்கள். அதற்கான விதைகளை வழங்குவதற்கு விவசாயத் திணைக்களம், பிரதம செயலர் ஊடாக நடவடிக்கை எடுத்துள்ளது. வடக்கின் ஏனைய 4 மாவட்டங்களும் குளத்தை நம்பி இருபோகத்தை மேற்கொள்கின்றன.

யாழ்ப்பாணத்தில் நெற்செய்கை என்பது வானம்பார்த்த பயிராகவே உள்ளது. மழையை நம்பி ஒருபோகம் மாத்திரமே செய்கின்றோம். எனவே தற்போதுள்ள காலநிலையின் மாற்றத்தைப் பயன்படுத்தி சிறுதானியப் பயிர்செய்கையில் ஈடுபட்டு விவசாயிகள் தங்கள் வருமானத்தை அதிகரித்துக் கொள்ளவேண்டும்.

எமது மண்ணின் தன்மைக்கு ஏற்பவும் எந்தப் பயிரை உற்பத்தி செய்தால் ஏற்றுமதி செய்யலாம் என்பதையும் ஆராய்ந்து அதற்கு ஏற்ப விவசாய நடவடிக்கைகளை எதிர்காலத்தில் முன்னெடுக்கவேண்டும். அதற்கு விவசாயத் திணைக்களம் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும்.

இன்றையதினம் நெல் அறுவடையுடன் சேர்த்து மூத்த விவசாயிகளை கௌரவித்திருந்தீர்கள். அதற்கு எனது மனமார்த்த பாராட்டுக்கள்.

இன்று இளையோர் விவசாயத்தில் நாட்டம் குறைந்தவர்களாக மாறிவிட்டார்கள். வெளிநாட்டு மோகத்தில் அவர்கள் சிக்கியிருக்கின்றார்கள். அங்கு சென்ற பலர் இப்போது நாட்டுக்கு திரும்பிக்கொண்டிருக்கின்றார்கள்.

எங்கள் இளையோர்கள் விவசாயத்தில் இறங்கினால் நாம் உற்பத்தியில் சிறப்பான இடத்தைப்பெற முடியும். வடக்கு மாகாணத்தில் என்ன வளம் இல்லை? இலங்கையின் ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும்போது வடக்கு மாகாணத்திலுள்ளதுபோன்று வளங்கள் ஏனைய மாகாணங்களில் இல்லை. ஆனால் அதை உரிய வகையில் நாங்கள் பயன்படுத்தத் தவறியிருக்கின்றோம். விவசாயமும் கடற்றொழிலும் எமது மாகாணத்தின் முக்கியமான பொருளாதாரத் தூண்கள். அவை இரண்டையும் சார்ந்த தொழிற்சாலைகள் எமது பிரதேசத்தில் எதிர்காலத்தில் உருவாக்கப்பட வேண்டும். அப்போதுதான் அந்த உற்பத்திப்பொருட்களை பெறுமதி சேர் பொருட்களாகவும் மாற்றியமைக்க முடியும் என்றார்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன், யாழ்ப்பாணம் மாவட்ட செயலர் ம.பிரதீபன், வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் திருமதி சுகந்தினி செந்தில்குமரன், கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் திருமதி தெய்வநாயகி பிரணவன் ,கௌரவ விருந்தினராக கைதடி பிரதேச கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் ந.கபில்ராஜ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் ஆகியோரது கலை நிகழ்வுகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.







**நான்காவது “அயலக தமிழர் மாநாடு” நேற்றும் நேற்றுமுன்தினமும் தமிழ்நாட்டின் சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்றது. “எத்திசையும் தமிழனங்கே!” என்ற தலைப்பில் நடைபெற்ற இந்நிகழ்வில், 60 நாடுகளிலிருந்தும் 17 மாநிலங்களில் இருந்தும் பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் தமிழ்நாடு அரசின் உத்தியோகபூர்வ அழைப்பின் பேரில் சிறீதரன் எம்.பி. சிறப்புவிருந்தினராகக் கலந்து கொண்டார்.**

# தினசரி பலாபலன்கள்

## குரோதி வருடம் தை மாதம் 01ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

**மேஷம்** – நீங்கள் நினைத்த பயணத்தால் மகிழ்ச்சியும் இலாபமும் அடைவீர்கள். தாய்வழி உதவிகள் உண்டு.

**ரிஷபம்** – சகோதர வகையில் நன்மை உண்டு. தைரியத்துடன் சவால்களை வெற்றி கொள்வீர்கள்.

**மிதுனம்** – ஞாபக மறதியால் அவதிப்படுவீர்கள். மனதில் எண்ணற்ற சிந்தனைகள் அலைபாய்ந்த வண்ணமிருக்கும்.

**கடகம்** – மன உளைச்சல் இருக்கும். செலவுகளைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளுங்கள்.

**சிம்மம்** – வீண் மனக்கவலைகள் வேண்டாம். எல்லாம் நல்லதற்கே என்று நினைத்து அமைதி கொள்ளுங்கள்.

**கன்னி** – உடல் மனம் அமைதியாக இருக்கும். நினைத்ததை இன்று சாதிப்பீர்கள். தன வரவு உண்டு.

**துலாம்** – பயணங்கள் அதிகரிக்கும். உடல் நோய்களைப் பார்த்துக் கொள்ளுங்கள். தொழிலில் சமாளிப்பீர்கள்.

**விருச்சிகம்** – சுப செய்திகளால் மன மகிழ்ச்சி அடைவீர்கள். கடவுள் வழிபாட்டில் மனதை செலுத்துவீர்கள்.

**தனுசு** – மௌனம் காப்பது அவசியம். நீங்களே உங்கள் மனதை கெடுத்துக் கொள்வீர்கள்.

**மகரம்** – காதல் சுற்றுலா செல்வீர்கள். ஆசைகளை நிறைவேற்றிக் கொள்வீர்கள். பெண்கள் உதவுவார்கள்.

**கும்பம்** – வீண் டென்ஷன் வேண்டாம். தேவையற்ற கோபங்களால் மனக் குழப்பமும் பகையும் ஏற்படும்.

**மீனம்** – தெளிந்த மனதுடன் இன்று அனைத்தையும் சாதிப்பீர்கள். குழந்தைகளால் நன்மையும் புகழும் உண்டு.

**திதி** : பிரதமை பி.ப. 3.21 வரை பின் துவிதியை

**நட்சத்திரம்** : புனர்பூசம் மு.ப.10.16 வரை பின் பூசம்

**பிறை** : தேய்பிறை

**யோகம்** : அமிர்த யோகம் மு.ப.10.16 வரை பின் சித்த யோகம்

**வார சூலை** : வடக்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது

**நல்ல நேரம்** : காலை- 8.26 – 9.26 மணி வரை பகல்- 12.26 – 1.26 மணி வரை மாலை- 4.56 – 6.56 மணி வரை

**ராகு காலம்** : 3.26 – 4.56 மணி வரை

**எமகண்டம்** : 9.26 – 10.56 மணி வரை

**குளிகை** : 12.26 – 1.56 மணி வரை

**சந்திராஷ்டமம்** : தனுசு ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும்

**அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள்**
**இன்று முற்பகல் 10.16 மணி வரை**
பரணி, ரோஹிணி, திருவாதிரை, பூசம், ஆயிலியம், பூரம், அஸ்தம், சுவாதி, அனுஷம், கேட்டை, பூராடம், திருவோணம், சதயம், உத்திரட்டாதி, ரேவதி

**இன்று முற்பகல் 10.16 மணிக்கு மேல்**
அஸ்வினி, கார்த்திகை, மிருகசீரிடம், புனர்பூசம், ஆயிலியம், மகம், உத்திரம், சித்திரை, விசாகம், கேட்டை, மூலம், உத்திராடம், அவிட்டம், பூரட்டாதி, ரேவதி

**போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு, தொழில், வியாபார இலாபங்கள்,கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், போட்டி, தேர்வுகளில் வெற்றி, தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும்.**

**விசேட தினம்**: மகர சங்கிராந்தி, தைப் பொங்கல்

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**



(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி :
077-0525325
078-6759739



தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2025 ஜனவரி 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை

# நல்வழி பிறக்கட்டும்

தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்த பின்னர் தமிழர்கள் கொண்டாடும் முதலாவது தைப்பொங்கல் இது.

தைப்பொங்கலன்று பொங்கலிடத் தேவையான பச்சரிசி நாட்டில் இல்லை, அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு என்றவாறான பிரச்சினைகளை எதிர்கொண்டு இன்றைய தினப் பொங்கலை தமிழர்கள் எதிர்கொண்டாலும் பொங்கல் பொங்கும் அந்தப் பாரம்பரியத்தைப் பேணும் வகையில் இன்றைய தினத்தைக் கொண்டாட ஏற்பாடுகள் நடந்திருக்கின்றன.

தமிழர்களின் பண்பாட்டு விழாவான பொங்கல் திருவிழா, தமிழரின் வாழ்வியலோடு குறிப்பாக, உழவுத் தொழில் செய்துவரும் சமூகத்தோடு இணைந்த நன்றி தெரிவிக்கும் விழாவாகும். உழவர்கள் தமது உழைப்புக்கும் தங்களுக்கு உதவிய இயற்கை மற்றும் கால்நடைகளுக்கும் நன்றி தெரிவிக்கும் வகையில் இந்த விழாவைக் கொண்டாடி வருகின்றனர். பயிர்த்தொழில் செய்பவர்களின் வாழ்வின் உற்பத்தி சார்ந்த இந்த விழா மத உணர்வும் இன உணர்வும் கடந்து பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் பண்பாட்டின் வெளிப்பாடாகவே கொண்டாடப்பட்டு வருகின்றது. ஆடி மாதத்தில் உழைத்துச் சேர்த்த நெல்லை மார்கழியில் வீட்டுக்குக் கொண்டுவந்து தமது உழைப்பின் பயனை நுகரத் தொடங்கியிருக்கிறார்கள்.

நாளை மாட்டுப் பொங்கல். பட்டி பெருக வேண்டும் தம்பிரானே.. பாற்பானை பொங்க வேண்டும் தம்பிரானே..என்று தமிழர் கிராமங்களில் களைகட்டும் இந்தப் பொங்கல் உழவுக்குக் கைகொடுத்த உன்னத உயிர்களுக்காகக் கொண்டாடப்படுகிறது.

வியாழன் நான்காவது பொங்கல். அதாவது 'காணும் பொங்கல்'. இதனைக் கன்னிப் பொங்கல் அல்லது கணுப் பொங்கல் என்றும் அழைப்பர். உற்றார் உறவினர்களைக் காணும் நாளையே காணும் பொங்கலாகக் கொண்டாடுகின்றனர். போட்டிகள், வீர சாகச விளையாட்டுகள் எல்லாம் நான்காவது பொங்கலில்தான் நடைபெறும். இவையெல்லாம் பொங்கல் பண்டிகையின் மகத்துவத்தை ஆற அமர மீட்டிப் பார்த்துக்கொள்வதற்கான சுருக்கமான தகவல்கள்.

இலங்கையில் தமிழர் வாழும் பகுதிகளில் இன்று தைப்பொங்கல் பொதுவாகவே களைகட்டியிருக்கும் என்பதில் ஐயமில்லை. அதேநேரம், இயற்கையின் அழிவும் மனிதனால் ஏற்படுத்தப்பட்ட பேரழிவும் பொருளாதார நெருக்கடியும் மனதைவிட்டு மெல்ல மெல்ல அகன்று மகிழ்ச்சி பொங்கும் திருநாள் உதயமாகியுள்ளது. அந்த மகிழ்ச்சி அனைவர் மனங்களிலும் நிலைபெற வேண்டும். அப்போதுதான் உண்மையான பொங்கல் பொங்கும்.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது நம்பிக்கையை இறுகப் பற்றிப் பிடித்துக்கொள்வதற்கான ஒரு நெம்புகோல். எல்லாம் இந்தத் தையுடன் சரிவந்துவிடும் என்று எண்ணிக்கொண்டிருந்தவர்களுக்கு இந்த நாள் ஒரு பொன்னான நாள். எப்போதும் பிரச்சினைகளையே சந்தித்து அதற்குத் தீர்வைக் கண்டுபிடிப்பதுதான் மனித இயல்பு. என்றாலும் இவ்வாறான ஓர் இனிய நாளில் எந்தப் பிரச்சினையும் எளிதில் தீர்ந்துவிட வேண்டும் என்று திடசங்கற்பம் பூணுவோம்.


அரசியல் நெருக்கடிகள் தீர்ந்து புதிய அரசாங்கமொன்று நாட்டில் ஆட்சியமைத்துள்ள நிலையில், அந்தப் புதிய ஆட்சியில் நாட்டுக்கு நன்மைகள் ஏற்பட இந்த தைத்திருநாள் வழிகோலவேண்டும். அதேபோல நீண்டகாலம் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வைக் காண்பதற்கான வருடமாக இந்த வருடம் திகழவேண்டும். புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்துவரும் நிலையில் அந்த முயற்சிகளும் வெற்றியடைய வேண்டுமென்பதே அனைவரினதும் அவா.

பல தசாப்தகாலங்களாக இந்நாட்டை ஆட்சிசெய்த ஆட்சியாளர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளால் சீரழிந்துள்ள சிஸ்டத்தை மாற்றியமைக்கும் செயற்பாடுகளை தற்போதைய அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. அதற்கும் சிறிது காலஅவகாசத்தை வழங்கவேண்டியது மக்கள் முன்னுள்ள கடமை. எவ்வாறாயினும் தை பிறந்தால் வழி பிறக்கும் என்பதுபோல நாட்டுக்கும் நல்வழி பிறக்கட்டும்.

## இன்றைய நாளில்..

- **1690 – கிளாரினெட் இசைக்கருவி ஜேர்மனியில் வடிவமைக்கப்பட்டது.**
- **1761 – இந்தியாவில் மூன்றாம் பானிபட் போர் அஹமது ஷா துரானி தலைமையிலான ஆப்கானியர்களுக்கும் மராட்டியர்களுக்கும் இடையில் இடம்பெற்றது. ஆப்கானியர்களின் வெற்றி இந்திய வரலாற்றில் ஒரு பெரும் திருப்புமுனையாக அமைந்தது.**
- **1865 – இலங்கையில் இடம்பெற்ற தொடரூந்து விபத்தில் 36 பேர் உயிரிழந்தனர்.**
- **1932 – தி இந்தியன் ஃபைன் ஆர்ட்ஸ் சொசைட்டி இசை நடன சபை சென்னையில் ஆரம்பிக்கப்பட்டது.**
- **1950 – சோவியத் ஒன்றியத்தின் மிக்-17 போர் விமானம் வெள்ளோட்டம் விடப்பட்டது.**
- **1974 – திருச்சி, தஞ்சை மாவட்டங்களிலிருந்து பிரித்து புதுக்கோட்டை மாவட்டம் உருவாக்கப்பட்டது.**
- **1995 – சந்திரிகா அரசு - விடுதலைப் புலிகள் 3ஆம் கட்ட பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாயின.**
- **1996 – உலகின் முதலாவது 24 மணி முழு நேர தமிழ் வானொலி ஒலிபரப்பு, கனேடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் டொராண்டோ நகரில் ஆரம்பிக்கப்பட்டது.**
- **2005 – சனிக் கோளின் டைட்டான் நிலாவில் ஐரோப்பாவின் இயூஜென் விண்கலம் இறங்கியது.**
- **2011 – டுனீசியப் புரட்சி: டுனிசியாவின் அரச தலைவர் பென் அலி சவூதி அரேபியாவுக்குத் தப்பி ஓடினார். அரேபிய வசந்தம் ஆரம்பமானது.**
- **2015 – திருத்தந்தை பிரான்சிஸ் யோசப் வாஸ் அடிகளை கொழும்பில் புனிதராகத் திருநிலைப்படுத்தினார்.**

# தமிழர் கலாசார பண்பாட்டில் முக்கியமானது தைப் பொங்கல்



பண்டிகைகளில் பொங்கல் சிறப்பான பண்டிகையாகும். மற்ற பண்டிகைகள் ஏதேனும் கடவுள் அவதரித்த நாட்களாக இருக்கும் அல்லது கடவுள் கையால் அசுரன் அழிக்கப்பட்ட நாளாக இருக்கும். ஆனால் பொங்கல் என்பது மக்கள் வாழ்வியலோடு இணைந்த பண்டிகையாகும்.

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்ற கூற்றின்படி உலகோருக்கு உணவளிக்கும் விவசாயத்தை கொண்டாடும் நிகழ்வே பொங்கல் பண்டிகை எனலாம்.

கரும்போடு ஒட்டிப் பிறந்து கிளை விரிப்பதை கணு என அழைப்பார்கள்.

தன்னோடு பிறந்த உறவுகளோடு நல்லிணக்கத்தைப் பேணுவதற்கு கரும்போடு ஒட்டிப்பிறந்த கணுவின் நினைவாக "கணுப் பொங்கல்" என்ற பெயரில் பொங்கலுக்கு அடுத்த நாளை கொண்டாடுகின்றனர்.

விவசாயத்தில் தன்னோடு இணைந்து உழைத்த மாடுகளுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக மாட்டுப் பொங்கலை கொண்டாடுகின்றனர்.

மற்றைய பண்டிகைகள் பண்டிகை தினத்தில் மட்டுமே பரபரப்பாக இருக்கும்.

பொங்கல் பண்டிகையோ துவங்கும் ஒரு வாரத்துக்கு முன்பாகவே சீர் வரிசை கொடுப்பது, வீடுகளுக்கு வெள்ளை அடிப்பது, மாடுகளின் கொம்புகளுக்கு வர்ணம் பூசுவது என களை கட்டத் துவங்கி விடும்.

தன்னோடு உடன் பிறந்த சகோதரிகளுக்கு தான் விளைவித்த விவசாயப் பொருட்களோடு வேறு சில பொருட்களையும் பொங்கல் விழாவைக் கொண்டாட விவசாயி சீராகக் கொடுப்பதே பொங்கல் சீர்வரிசை என்பார்கள்.

பொங்கல் வைப்பதற்காக பச்சரிசி, மண்ட வெல்லம், சிறுபயறு, புத்தாடை, மஞ்சள்கொத்து, கரும்பு, பனங்கிழங்கு, வாழைக்குலை, காய்கறிகள், புழுங்கல் அரிசி, தேங்காய், படியாக கொடுப்பதற்கு பணம் போன்றவற்றை தான் பொங்கல் சீர் என அழைப்பார்கள்.

தென் மாவட்டங்களில் பொங்கல் சீர்வரிசை வழங்குவதை பொங்கப்படி கொடுப்பது என அழைப்பார்கள். வட மாவட்டங்களில் இதனை பொங்கல் சீர் என்றழைக்கிறார்கள்.

மரக்கன்றை பிடுங்கி இன்னொரு இடத்தில் நடும்போது அதனுடைய பிறந்த இடத்து மண்ணோடு சேர்த்து எடுத்து வைத்தால் தான் செழிப்பாக வளரும்.

பெண்களும் அது போலத்தான்...

மணமாகி புகுந்த வீடு சென்று வருடங்கள் பல ஆனாலும் பிறந்த வீட்டு நினைப்பை மறவாமல் மனதுக்குள் வைத்து வாழ்ந்து கொண்டிருப்பார்கள்.

பொங்கல் துவங்கும் ஒரு வாரத்துக்கு முன்பே பொங்கப்படி கொடுப்பது களை கட்டத்துவங்கும்.

கிராமங்களில் அம்பாசிடர், டிரக்கர், ஆட்டோவின் மேற்புறம் கரும்புத் தோகையோடு கட்டப்பட்டு நுழைந்தாலே அது பொங்கப்படி கொண்டு செல்லும் வண்டி என்பதைக் கண்டுபிடித்து விடுவார்கள்.

பொங்கப்படி வரும் தோரணையை வைத்தே எத்தனையாவது பொங்கப்படி என்று கிராமங்களில் பெரியவர்கள் கணித்துச் சொல்வார்கள்.

திருமணமான முதல் மூன்று ஆண்டுகள் பொங்கப்படி வெகு விமர்சையாக வரும்.

முதல் வருட பொங்கல் படியை தலைப் பொங்கல் படி என அழைப்பார்கள்.

இந்த தலைப் பொங்கல் படியை கிராமங்களில் முந்தைய தலைமுறை காலத்தில் மகேந்திரா வேனில் புதிய பித்தளை அல்லது செம்பு பானை,



ஒரு கட்டு கரும்பு, மஞ்சள் குலை, 25 கிலோ அரிசி, புதுத்துணி, எல்லா வகை காய்கறிகளிலும் ஒரு கிலோ, பனங்கிழங்கு, இனிப்பு சகிதம் பெண்ணைக் கட்டிக் கொடுத்த பெற்றோர்கள் உறவினர்கள் சூழ தங்கள் மருமகன் வீட்டுக்கு தலைப்பொங்கல் படியைக் கொண்டு செல்வார்கள்.

இரண்டாம் வருட பொங்கல் படியை அம்பாசிடர் காரில் உறவினர்கள் இல்லாமல் பெற்றோர்கள் மட்டும் அரைக்கட்டு கரும்பு, பத்து கிலோ அரிசி, வெல்லம், பயறு என முந்தைய வருடத்தை விட குறைவான பொருட்களை பொங்கப்படியாக பெண் வீட்டுக்கு கொண்டு செல்வார்கள்.

மூன்றாம் வருட பொங்கல் படியை பெண்ணின் பெற்றோர்களில் யாராவது ஒருவர் அல்லது அண்ணன் தம்பியில் ஒருவர் ஆட்டோவில் அல்லது சைக்கிளில் 5 கிலோ அரிசி, மூன்றாக வெட்டிய முழுக்கரும்பு, ஒரு கிலோ அரிசி, ஒரு கிலோ பயறு, ஒரு கிலோ வெல்லம் என்ற அளவில் பொங்கப் படியை கொண்டு செல்வார்கள்.

மூன்று வருடங்கள் தாண்டிய பின் பொங்கலிடத் தேவையான அளவு பொருட்களை வாங்கி கொடுப்பார்கள்.

பெற்றோர் காலத்துக்கு பின்னர் உடன் பிறந்த அண்ணன் தம்பிகள் தங்கள் சகோதரிகளுக்கு அவர்களின் இறுதிக் காலம் வரை கொடுப்பார்கள்.

சில வீடுகளில் பையனைப் பெற்ற அம்மாக்காரி தலைப் பொங்கலுக்கு இன்னென்ன பொருட்கள் வேண்டும் என்று மருமகளிடம் லிஸ்ட் கொடுத்து விடுவார்.

இதில் ஏதாவது குறைவாக பொங்கல் படியாக வந்தால் "பொங்கப் படிக் கொடுக்கக் கூட வக்கத்த வூட்டுல போய் பொண்ணை கட்டிட்டு வந்துட்டான் பொசக்கெட்டப் பய" என மகனை திட்டுவது மாதிரி மருமகள் வீட்டை ஜாடையாக மாமியார் சொல்வதுண்டு.

மாமியார் இந்த டைப் என்றால் சில மணம் முடித்த பெண்கள் வேறு ரகமாக இருப்பார்கள்.

தன் கணவனின் தம்பி அதாவது தனது கொழுந்தன் மனைவியை விட தனக்கு பொங்கல் படி அதிகமாக வந்திருக்கின்றது என்று புகுந்த வீட்டில் தனது பிறந்த வீட்டுப் பெருமையை விட்டுக் கொடுக்கக் கூடாது என்பதற்காக பொங்கப்படி பட்டியலை தானே பட்டியல் போட்டு தகப்பனார் வீட்டுக்கு அனுப்பி விடுவாள்.

தான் அனுப்பிய பட்டியல் பொருட்களை குறைவாக வாங்கி கொண்டு வந்து விடுவார்களோ!! தனது ஓரகத்தியிடம் தனது வீட்டு பொங்கப்படி பவுசை காட்ட முடியாதோ!! என எண்ணி போனை டயல் செய்து தனது அம்மாவிடம்...

யம்மோவ்!! நான் அனுப்பிவிட்ட பொருள்களில் ஒரு பொருளாவது குறைவா வந்துச்சுன்னா என்னோட மாமியார் குத்தல் குத்தலா நம்ம வீட்ட பத்தி குறைச்சு பேசுவாவ!!...

என எதையும் பேசாத நல்ல மாமியாரைப் பற்றி இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி நல்ல மாமியாரை பொல்லாத மாமியாராக தனது தாய் வீட்டில் சொல்லும் மகள்களும் உண்டு.

தன்னுடைய அம்மாவின் மீது வீண் பழியை சுமத்தி மனைவி அவளுடைய தாய் வீட்டில் இப்படி பட்டியல் போட்டு பொங்கப் படி வாங்குவதை கணவன் அறிந்து மனைவியிடம்...

என் மீதும் என்னுடைய அம்மா மீதும் வீணாக பழி சுமத்தி இப்படி அதிகமாக பொங்கப்படி வாங்குகிறாயே!!

உங்களது வீட்டில் எங்களைப் பற்றி என்ன நினைப்பார்கள் என மனைவியிடம் கேட்டால்...

ந்நேருங்க! உங்க வேலைய பாத்துட்டு இருங்க!! உங்களுக்கு ஒன்னும் தெரியாது !!! இப்படிக் கேட்டாத்தான் பொங்கப்படி எங்க வீட்டுல இருந்து வரும் எனக் கணவன் வாயை அடைத்து விடும் பெண்களும் உண்டு.

எல்லோர் வீட்டுக்கும் பொங்க படி வந்து விட்டதே!! அப்பா கொண்டு வருவார்களா!!! மாட்டார்களா!! என ஏக்கத்தோடு வாசலையும் தெருவையும் பார்த்துக் கொண்டிருக்கும் பெண்கள் தனது வீட்டில் இருந்து வரும் பொங்கப்படியை கொண்டு வரும் தாய், தந்தையைப் பார்த்ததும் அவர்கள் மனதில் ஏற்படும் சந்தோஷ உணர்வுகளை அவர்களால் மட்டுமே விவரிக்க முடியும்.

புகுந்த வீட்டில் எல்லா வசதிகளும் இருந்து, மாமனார் வீட்டில் இருந்து பொங்கல் படி வருவதைப் பற்றி எதிர்பார்க்காத மருமகன் கணவனாக கிடைத்தும்..



இந்தா மக்களேய்!!! பொங்கப்படியா இதை வைச்சிக்க எனச் சொல்லி திருமணம் முடித்து பதினைந்து ஆண்டு கழிந்த பின்பும் அஞ்சு கிலோ அரிசிப் பையோடு ஐநூறு ரூபாயை கையில் திணித்துச் செல்லும் தனது தந்தை சென்ற பின்...

நமக்குப் பின் திருமணம் முடித்த உங்களது தங்கைக்கு உங்களது வீட்டில் இருந்து நீங்க பொங்கப் படி கொண்டு போகவில்லை.

எங்க அப்பாவ பாத்தியளா!! மொவளை மறக்காம பொங்கப் படி தந்துட்டு போறாவ!! என கர்வத்தோடு கணவனோடு சொல்லும் பொழுது அந்தப் பெண்ணிடம் தெரிவது நிச்சயமாக பிறந்த வீட்டு பெருமையை பேசும் குணம் அல்ல!! மாறாக தன் மீது தன் தகப்பன் வைத்திருக்கும் பாசத்தை பெருமையோடு சொல்வது ஆகும்.

பொங்கப்படி என்பது சின்ன வெங்கல பானையும் பச்சரிசியும் கரும்பு துண்டுகளையும் சேர்த்து ஏதோ ஆயிரம் ரூபாய் மதிப்பான பொருட்கள் தானே!! இதற்காகவா இத்தனை பில்டப் என்று பார்ப்பவர்களுக்கு தோன்றும்.

அதை கொண்டு வரும் அப்பா, அண்ணணின் பாசத்தை மகளால், தங்கையால் மட்டுமே உணர முடியும்.

பொங்கப்படி அது உறவுகளை இணைக்கும் உறவுப்படி...

முன்பெல்லாம் சேலை, தாவணி போன்ற பாரம்பரிய உடை அணிந்து வீட்டு முற்றத்தில் விறகு அடுப்பில் தென்னம் பாளை, பனை ஓலையைப் பயன்படுத்தி சூரிய பகவானுக்கு பொங்கலிட்டு படைத்து கடவுளை வணங்குவார்கள்.

அடுக்குமாடி குடியிருப்புகளில் குடியிருக்கும் நாங்கள் விறகு அடுப்புக்கு எங்கே போவது!!! மார்பிள், கிரானைட் போட்ட தளத்தில் விறகு அடுப்பை பயன்படுத்த முடியுமா என எதிர் கேள்வி கேட்டு...

இரவு நேர உடையை அணிந்து கொண்டு சமையலறை கேஸ் அடுப்பில் சின்ன எவர் சில்வர் பானையில் வேக வைத்த பச்சரிசி வெந்ததும் சிறு கிண்ணத்தில் எடுத்து ஹேப்பி பொங்கல் என்று கணவனுக்கு மனைவி கொடுக்கும் அவசர வாழ்வியல் சூழலில் பெரும்பாலானோர் இருக்கின்றோம்.

நகரங்களில் இருக்கும் அத்தனை பேரும் கிராமத்தை பூர்வீகமாகக் கொண்டவர்கள் தானே.

எனவே பொங்கல் விடுமுறைக்கு அவரவர் சொந்தக் கிராமங்களுக்கு சென்று பாரம்பரிய முறைப்படி தமிழர் திருநாளான பொங்கலை கொண்டாடுவோம்.

பண்டிகைகளும் பாரம்பரியங்களும் இன்றளவும் கிராமங்களில் உயிர்ப்போடு தான் இருக்கின்றன!

நன்றி – மாலை மலர்

## நக்கல் நமசிவாயம்

***பல அரசியல்வாதிகளுக்கு நாளைக்குத்தான் பொங்கல் என்னங்கோ?***



# செழிப்பான நாளைய தினத்துக்கு தைப்பொங்கல் வழிகாட்டட்டும்

## சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன வாழ்த்து



தைப்பொங்கல் இன வேறுபாடுகள் இன்றி, பொங்கலை முழு நாட்டுக்கும் பகிரக்கூடிய கருணையுள்ளம் கொண்டதாக, ஒத்துழைப்பு, சமத்துவம், செழிப்பு மற்றும் நோய்நொடிகளின் ஆபத்துக்களிலிருந்து மீண்ட நாளைய தினத்தின் தொடக்கமாகட்டும் என சபாநாயகர் வைத்தியர் ஜகத் விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள தைப்பொங்கல் வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது ,

இலங்கையர்கள் உள்ளிட்ட உலகளாவிய தமிழ் மக்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் கொண்டாடும் 2025ஆம் ஆண்டின் முதலாவது விழா தைப்பொங்கல் தினமாகும். மலர்ந்துள்ள தைப்பொங்கல் தினம் செழிப்பு மிக்க, மகிழ்ச்சியான மற்றும் ஆன்மீகம் மிக்க தினமாக அமைய அனைவருக்கும் வாழ்த்துக்களைக் கூறிக்கொள்கின்றேன்.

விளைச்சலை விருத்திசெய்வதற்கு கதிரவன் வழங்கிய ஒத்துழைப்புக்கும் அதனை மேலும் வளப்படுத்த மழையின் பங்களிப்புக்கும் பசுக்களுக்கும் நன்றி செலுத்துவது இந்தத் தைப்பொங்கல் விழாவின் பிரதான நோக்கமாகும்.

கடவுள் மற்றும் இயற்கையுடன் எப்பொழுதும் பின்னிப் பிணைந்திருக்கும் எமது சகோதர தமிழ் சமூகத்தினர் இந்தப் பண்டிகையை மன நிறைவுடனும் மகிழ்ச்சியுடனும் கொண்டாடுகின்றனர்.


நன்றிக்கடன் தெரிவிப்பது தமது வாழ்க்கையுடன் இணைந்த கௌவரமான பொறுப்பு எனக் கருதி அவர்கள் தமது விளைநிலங்களிலிருந்து பெறும் புதிய அறுவடைகளை தாம் நம்பிக்கை வைத்துள்ள சூரிய பகவான் உள்ளிட்ட ஏனைய கடவுள்களுக்கு பூஜை செய்கின்றனர்.


தமிழ் மக்களின் பாரம்பரிய நாட்காட்டிக்கு அமைய ஜனவரி மாதம், தை மாதம் என்று அழைக்கப்படுகின்றது. இது மிகவும் அலங்காரமான கலாசார நிகழ்வுகளைக் கொண்ட விழாவாகும். தமது இல்லத்தின் தூய்மையை பிரதான விடயமாகக் கொண்ட தமிழ் பெண்களின் அழகான கோலங்களால் அலங்கரிக்கப்பட்ட முற்றம் இந்த பொங்கல் விழாவில் மறக்கமுடியாத, அலங்காரமான அடையாளமாகும்.

2025ஆம் ஆண்டில் மலரும் தைப்பொங்கல் இன வேறுபாடுகள் இன்றி, பொங்கலை முழு நாட்டுக்கும் பகிரக்கூடிய கருணையுள்ளம் கொண்டதாக, ஒத்துழைப்பு, சமத்துவம், செழிப்பு மற்றும் நோய்நொடிகளின் ஆபத்துக்களிலிருந்து மீண்ட நாளைய தினத்தின் தொடக்கமாகட்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



*2025 ஆம் ஆண்டின் முதலாவது துருது போயா தினத்தை முன்னிட்டு கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (13) தர்ம போதனை நிகழ்வு இடம்பெற்றது. இரத்மலானை பரதம்மசைத்திய பிரிவேனா விகாராதிபதியும் ஸ்ரீகல்யாணி சாமகிரி தம்ம மகா சங்கத்தின் பிரதி பதிவாளரும் உலக பௌத்த சங்க சம்மேளனத்தின் பொதுச் செயலாளருமான சங்கைக்குரிய கலாநிதி மாஇடிபே விமலசார தேரர், தர்ம போதனையை நிகழ்த்தினார்.*




# தலதா மாளிகையில் புத்தரிசி விழா



(எம்.ஏ.அமீனுல்லா)

கண்டி ஸ்ரீதலதா மாளிகையில் நேற்று (13) புத்தரிசி விழா இடம்பெற்றது.

இவ்விழா கண்டி ஸ்ரீ தலதா மாளிகையின் தியவதன நிலமே பிரதீப் நிலங்க தெல மற்றும் பல முக்கிய பௌத்த மத பெரியார்கள் ஆகியோரது இணைத் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

ஸ்ரீ தலதா மாளிகையை மையமாக வைத்து ஆண்டுதோறும் நடத்தப்படும் நான்கு முக்கிய திருவிழாக்களில் முதன்மையானது இந்த புத்தரிசி விழாவாகும்.

இது வருடந்தோறும் பௌர்ணமி தினத்தை மையப்படுத்தி கொண்டாடுவது பழங்காலத்திலிருந்தே இருந்து வரும் பாரம்பரியமாகும்.

ஸ்ரீ தலதா மாளிகைக்கு சொந்தமான நெல் வயல்களின் அறுவடை செய்யப்பட்டுள்ள நெல்லின் முதற் பகுதியை புத்த பெருமானுக்கு காணிக்கையாக செலுத்தும் வருடாந்த நிகழ்வே நேற்று இடம்பெற்ற இந்த புத்தரிசி விழாவாகும்.

ஸ்ரீ தலதா மாளிகைக்கு சொந்தமான வயல்களில் அறுவடை செய்யப்பட்ட முதல் அறுவடையை பல்லேகலையில் உள்ள ஸ்ரீ தலதா மாளிகையின் நெல் களஞ்சியத்தில் வைக்கப்பட்டு, விழாவுக்கு ஒரு வாரத்துக்கு முன்பு பல்லேகலையில் இருந்து நெல் மற்றும் புது அரிசியை யானைகளுடன் ஊர்வலமாக தலதா மாளிகைக்கு கொண்டு வருவதும் பழங்கால வழக்கமாகும்.

# வர்த்தகர் மீது துப்பாக்கிச்சூடு

மாத்தறை, தெவிநுவர, தல்பாவில பகுதியில் உள்ள கருவாடு வர்த்தகர் ஒருவரின் வீட்டின் முன்னால் அடையாளம் தெரியாத இருவர் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த துப்பாக்கிச் சூடு நேற்றுமுன்தினம் (12) மாலை 4.45 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சிவப்பு நிற மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இந்த துப்பாக்கி பிரயோகத்தை நடத்தியுள்ளனர்.

கருவாடு வாங்க விரும்புவதாகக் கூறிய நிலையில, வாயில் கதவை திறந்த போது இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது வாயிலுக்கு அருகிலுள்ள சுவரில் துப்பாக்கிச் சூடு பாய்ந்துள்ளதுடன் எவருக்கும் எந்தவித காயங்களும் ஏற்படவில்லை என பொலிஸார் குறிப்பிட்டனர்.

இச்சம்பவம் அருகிலிருந்த சி.சி.ரி.வி கமராவில் பதிவாகியுள்ளது.

துப்பாக்கிச் சூட்டை நடத்தியவர்கள் பிரவேசித்த மோட்டார் சைக்கிள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், கந்தர பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு ஜனாதிபதி அநுர நேற்று சீனா பயணம்



சீனாவுக்கான நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நேற்று (13) பிற்பகல் நாட்டிலிருந்து பயணமானார்.

சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கின்(Xi Jinping) அழைப்பின் பேரில், ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க இன்று (14) முதல் 17 ஆம் திகதி வரை சீனாவில் தங்கியிருப்பார். இந்த விஜயத்தின் போது ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் மற்றும் சீன பிரதமர் லி கியாங்(Li Qiang) மற்றும் இராஜதந்திரிகளை சந்திக்கவுள்ளார்.

அத்தோடு இவ்விஜயத்தின் போது, தொழில்நுட்பம், விவசாயம் மற்றும் வறுமை ஒழிப்பு உள்ளிட்ட துறைசார் பல கள விஜயங்களிலும் ஜனாதிபதி பங்கேற்கவுள்ளதோடு பல உயர் மட்ட வர்த்தகக் கூட்டங்களிலும் கலந்துகொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்விஜயத்தின்போது இரு நாடுகளுக்கும் இடையே பல புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவுள்ளன.

ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற பின்னர் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மேற்கொள்ளும் இரண்டாவது உத்தியோகபூர்வ வெளிநாட்டு விஜயம் இது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால உறவுகளை மேலும் வலுப்படுத்துவதில் இந்த விஜயம் மிக முக்கியமான முன்னெடுப்பாகக் கருதப்படுகிறது. இதன் ஊடாக இருதரப்பு பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் முதலீட்டு ஒத்துழைப்பை மேம்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்களுடன் ஆளுங்கட்சி பிரமுகர்கள் தமிழகத்தில் சந்திப்பு






இலங்கை கடற்தொழில், நீரியல் வளங்கள் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் மற்றும் பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்புத் துறை துணை அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் ஆகியோர் நேற்றுமுன்தினம் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக்குழு அலுவலகத்தில் சந்திப்பு ஒன்றினை மேற்கொண்டனர்.

கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம், பொன்னாடை அணிவித்தும், நூல்களை வழங்கியும் இலங்கை அமைச்சர்களை வரவேற்றார். அமைச்சர்கள் இருவரும் மலையக பகுதியை சேர்ந்தவர்கள் என்பது மகிழ்ச்சி அளிப்பதாக தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து அவர்களுடன் நடைபெற்ற உரையாடலில் மத்தியக்குழு உறுப்பினர் உ.வாசுகி, மாநிலச் செயற்குழு உறுப்பினர்கள் க.கனகராஜ், எஸ்.கண்ணன், மாநிலக்குழு உறுப்பினர் இரா.சிந்தன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இலங்கையில் புதிதாக அமைந்துள்ள இலங்கை அரசுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வாழ்த்து தெரிவித்ததோடு, தமிழக மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்லும் போது முன்னெழுகிற பிரச்சனைகள் குறித்து கவலை தெரிவிக்கப்பட்டது.

இலங்கை தோட்ட தொழிலாளர்களின் வாழ்விட, வாழ்வாதாரப் பிரச்சனைகளில் கவனம் செலுத்த வேண்டும் என்பது முன்வைக்கப்பட்டது. தமிழ்நாட்டு முகாம்களில் உள்ள இலங்கை தமிழர்களின் கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்) வழங்க வேண்டும். குறிப்பாக, கல்விக்காக வெளிநாடு செல்லும் மாணவர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டது.

மாகாணத் தேர்தல்கள் நடத்துவது பற்றியும், தமிழ்மொழிக்கு சம அந்தஸ்து வழங்குவது பற்றியும் நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டும் எனக் கோரப்பட்டது.

இலங்கையின் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், தமிழர் இஸ்லாமியர் உள்ளிட்ட சிறுபான்மை இன மக்களின் பிரச்சனைகளில் உறுதியாக கவனம் செலுத்தும், மக்கள் தங்கள் மீது அதன் காரணமாகவே நம்பிக்கை வைத்துள்ளனர் என்று அமைச்சர்கள் தெரிவித்தனர். பரஸ்பர உறவு தொடர வேண்டும் என்ற கருத்து இருத்தரப்பிலும் பிரதிபலித்தது குறிப்பிடத்தக்கது.

# நீண்டகால ஊழியர்களுக்கு சிறப்பு விருதுகள் இரவில் கௌரவமளித்த பான் ஏசியா வங்கி




பான் ஏசியா வங்கியின் மனிதவளத் துறையால் ஏற்பாடு செய்யப்பட்ட சிறப்பு விருது விழாவில்,வங்கி தனது நீண்டகால ஊழியர்களின் அர்ப்பணிப்பு மற்றும் அயராத உழைப்பை பாராட்டி அவர்களை கௌரவப்படுத்தியது. இந்த மதிப்புமிக்க நிகழ்வானது வங்கியின் ஊழியர்களின் விலைமதிப்பற்ற பங்களிப்புகளுக்கு ஒரு சான்றாக அமைந்ததுடன், அவர்களின் தளராத சேவை நிறுவனத்தின் வெற்றிக்கு உந்துதலாகவும் அமைந்திருந்ததாக சிலாகிக்கப்பட்டது.

15, 20 மற்றும் 25 ஆண்டுகளுக்கும் மேலாக சேவை செய்தவர்களை கௌரவிக்கும் வகையில், நாடு முழுவதும் உள்ள பல்வேறு கிளைகள் மற்றும் துறைகளைச் சேர்ந்த ஊழியர்கள் மாலை அணிவிக்கப்பட்டு பாராட்டப்பட்டனர். இந்த நிகழ்வில் இதயபூர்வமான நன்றியுரைகள் ,உளம் கவரும் விளக்கக்காட்சிகள் மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வு பான் ஏசியா வங்கியின் விதிவிலக்கான நீண்டகால குழு உறுப்பினர்களின் சாதனைகளை அங்கீகரிக்கும் ஒரு மறக்கமுடியாத சந்தர்ப்பத்தை உருவாக்கியது.

பான் ஏசியா வங்கியின் பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி நளீன் எதிரிசிங்க தலைமை உரையை ஆற்றி, ஊழியர்களின் அர்ப்பணிப்புக்கு நன்றி தெரிவித்தார். "எங்கள் அமைப்பின் முதுகெலும்பை நாங்கள் மதிக்கிறோம் - எங்கள் மக்களை நாங்கள் மதிக்கிறோம். எங்கள் நீண்டகால ஊழியர்களின் அர்ப்பணிப்பு மற்றும் கடின உழைப்பு எங்கள் வளர்ச்சி மற்றும் அடித்தளத்தை அமைத்துள்ளது, இந்த கட்டுக்கோப்பு எதிர்வரும் ஆண்டுகளிலும் தொடாந்து செல்லும்" என்றார்.



# களுத்துறை மாவட்ட சபரிமலை யாத்திரை குழுவுக்கு சென்னை விமான நிலையத்தில் வரவேற்பு





களுத்துறை மாவட்டம், இங்கிரிய, றைகம், கீழ்பிரிவு அருள்மிகு பத்ரகாளி அம்மன் சாஸ்தா பீட திருக்கோயிலில் இயங்கிவரும் கங்கணபதி யாத்திரை குழு சென்னை விமான நிலையத்துக்கு வருகை தந்திருந்தார்கள்.

இதன்போது கங்கணபதி சாஸ்தா பீடத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சண்முகவேல் சிவகுமார் (இருமுடி) குருசுவாமி மற்றும் சுரேஸ்குமார் குருசுவாமி ஆகியோரை தென்னிந்திய ஊடகவியலாளரும் புதிய வானம் மக்கள் நல அறக்கட்டளையின் சர்வதேச அமைப்பாளருமான காஞ்சிபுரம் தியாகராஜன் மற்றும் ஊடகவியலாளர் மணி ஸ்ரீகாந்தன் ஆகியோர் பொன்னாடை போர்த்தி வரவேற்றனர்.

கங்கணபதி யாத்திரை குழுவில் 21 இருமுடி சாமிகள் உள்ளடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவர்கள் களுத்துறை மாவட்டம் மற்றும் காலி, அவிசாவளை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த குருசாமிகள்.

சபரிமலை யாத்திரைக்காக வருகை தந்திருக்கும் இருமுடி சாமிகளின் இந்த ஆன்மீக பயணத்தில் தமிழ்நாட்டிலுள்ள மேல்மருவத்தூர், திருவண்ணாமலை, வேலூர் பொற்கோவில், சமயபுரம், தஞ்சாவூர்,பிள்ளையார் பட்டி, மதுரை, குற்றாலம் உள்ளிட்ட திருத்தலங்களையும் கேரளாவில் உள்ள ஆரியங்காவு, குளத்துப்புழா, எரிமேனி, நிலக்கல், பந்தளம், சோட்டாணி கரை, குருவாயூர், மாசாணி அம்மன் ஆகிய திருத்தலங்களையும் தரிசிக்கவுள்ளதாக யாத்திரை குழுவின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சண்முகவேல் சிவகுமார் குருசாமி தெரிவித்தார்.

## அனைவர் வாழ்விலும் இன்பமுண்டாகட்டும்



இன்று மங்களச் சிறப்புடன் தைத்திங்கள் மலர்ந்துள்ளது. ஒரு இனத்தின் அல்லது ஓர் குழுவினருடைய பண்பாட்டையும் கலாசார விழுமியங் களையும் தொண்மையை யும் அவர்கள் கடைப்பிடித்து வரும் விழாக் கள் பண்டிகைகள் ஊடாக நாம் அறிந்து கொள்ள முடியும்.

தமிழர்களின், "தைத் திங்கள் தண்கயம் படியும்" என்று நற்றிணை, "தைத் திங்கள் தண்ணிய தரினும்" என்று குறுந்தொகை,"தைத் திங்கள் தண்கயம் போல்" என்று புறநானூறு, "தைத் திங்கள் தண்கயம் போல" என்று ஐங்குறு நூறு, "தையில் நீராடி தவம் தலைப்படு வாயோ" என்று கலித்தொகை என்பன கூறி நிற்கின்றன.

பொங்கல் திருநாள் தமிழர்களின் நன்றி மறவாமை பண்பையும் பிரதான மாக எடுத்துக் காட்டுகின்றது. பல்வேறு சிறப்புகளை தன்னகத்தேயுடைய தமிழ் மக்கள் பல இன்னல்களை, துன்பங்களை சுமந்தவர்களாகவே காணப்படுகிறார்கள். தற்காலத்தில் எமது இளம் சமுதாயத்தில் பல்வேறு புறல்வுகளை காண்பது வேதனையே. இவற்றிலிருந்து நாம் மீண்டு உயர்வு பெற இறை பிரார்த்தனையுடன் தன்னம்பிக்கையும் அவசியமாகும். இறை வழிபாட்டையும் திருமுறைகளின் உயர்வையும் எமது இளம் சமூகத்தினருக்கு அதிகம் வழங்குவோம். இனியவை நடக்க வேண்டும். ஒவ்வொருவர் வாழ்விலும் இன்பமுண்டாகட்டும். சுபமங்களம் உண்டாகட்டும் என இந்துக் குருமார் அமைப்பின் சார்பில் பகிர்ந்து மகிழ்ச்சி அடைகிறோம்.

**'சிவாகம கலாநிதி' சிவஸ்ரீ**
**கு.வை.க. வைத்தீஸ்வரக்குருக்கள்,**
**தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.**
**சிவஸ்ரீ ச. சாந்தரூப குருக்கள்,**
**செயலாளர், இந்துக் குருமார் அமைப்பு.**

## தை பிறந்தால் வலி விலகும்

**கலாநிதி நல்லையா குமரகுருபரன்**



அன்பு தமிழ் நெஞ்சங்களுக்கு இன்பத் திருநாள் தைப்பொங்கல் வாழ்த்துக்கள். நம்தம் நற்றமிழ் எழுச்சி உலகெலாம் செந்தமிழால் மிளிர்கின்றது.சென்ற இடமெல்லாம் தமிழ் உணர்வு தழைக்கின்றது . ஆயினும் நம்நாட்டில் நமக்குள் நாம் பெரிதுபடுத்தும் தனிமனித காழ்ப்புணர்வுகள், வேற்றுமையிலும் ஒட்டுமொத்த நமக்கான ஒற்றுமை இன்மையால், தகுந்த இடத்துக்கு தகுந்தவர் கொண்டு மேலும் பலம்சேர்க்காது வலு இழந்து நிற்கின்றோம் . இந்த நேரத்தில் இளைய தளபதி கஜேந்திரகுமாரின் ஒருமைப்பாட்டுக்கான குரல் நம்பிக்கையளிக்கின்றது . தவறுகளின் விளைவை உணர்ந்து விட்டோம் என நம்புகின்றேன். அந்தவகையில் தை பிறந்தால் வலி விலகும் வழி பிறக்கும் என திடசங்கற்பம் பூணுவோம். தை பிறந்தால் வலி விலகும் வழி பிறக்கும் .

**அன்பு தமிழ் நெஞ்சங்களுக்கு இன்பத் திருநாள் தைப்பொங்கல் வாழ்த்துக்கள்.**



# 100 சதவீதம் பெண் பணியாளர் கொண்ட சுற்றுலா ஹோட்டல்

## தம்புள்ளையில் திறந்து வைப்பு



(ஜே.எம்.ஹாபீஸ்)

தம்புள்ளை, கண்டலம பகுதியில் 100 சதவீத பெண் பணியாளர்களைக் கொண்ட சுற்றுலா ஹோட்டல் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. அம்பயாலு (உற்ற நண்பர்) என்ற இச்சுற்றுலா ஹோட்டல் திறப்பு விழாவில் இலங்கையிலுள்ள பல வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் அரச உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

ஹோட்டலில் இடம்பெற்ற பிரித் சமய நிகழ்விலும் பிக்குனிகள் மட்டும் கலந்து கொண்டனர். இவ் ஹோட்டலில் பெண்களால் சகல பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

இப் புதிய மகளிர் ஹோட்டலில் அனைத்து வேலைகளையும் பெண்களே செய்வது சிறப்பு வாய்ந்தது என்று அழைக்கப்பட்ட விருந்தினர்கள் பலர் தெரிவித்தனர்.அநுராதபுரத்தைச் சேர்ந்த கௌசல்யா பட்டகொட, தலைமை சமையல்காரராக நியமிக்கப்பட்டுள்ளார். தெற்காசியாவில் உள்ள ஒரு ஹோட்டலில் தலைமை சமையல்காரராக பெண் ஒருவர் இருப்பது இது முதற் சந்தர்ப்பமாகும்.



*“அயலக தமிழர் மாநாடு” நேற்று சென்னையில் இடம்பெற்ற நிலையில், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் செந்தில் தொண்டமான், தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலினை மரியாதை நிமித்தமாக சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போது, இலங்கை வாழ் தமிழர்களின் வளர்ச்சி குறித்து ஆராயப்பட்டதுடன், கடந்த காலங்களில் இலங்கை மக்களுக்கு தமிழக முதலமைச்சர் செய்த உதவிகளையும் நினைவுகூர்ந்தார். இதன்போது மு.க. ஸ்டாலினுக்கு செந்தில் தொண்டமான் பொங்கல் வாழ்த்துகளையும் தெரிவித்தார்.*



*பிறைட் சமூக அபிவிருத்தி அறக்கட்டளையினூடாக பாமஸ்டன் ரட்ணகிரிய (லிந்துலை பகுதியிலுள்ள) சிறுவர் பராமரிப்பு நிலையத்திலுள்ள சிறார்களுக்கு இலவசமாக தண்ணீர் போத்தல்கள், சாப்பாட்டுப் பெட்டிகள் வழங்கப்பட்டன. இப்பொதிகள் வன்னி ஹோப் நிறுவனத்தின் ஒருங்கிணைப்பாளர் என்.நகுலேஸ்வரனால் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.*

*(தலவாக்கலை நிருபர்)*

## மாத்தளை ரயில்வே திணைக்கள பொதி நிறுக்கும் தராசு செயலிழப்பு

*(யடவத்த செய்தியாளர்)*

மாத்தளை ரயில்வே நிலையத்தில் பொதிகளை நிறுக்கும் தராசு கடந்த மூன்று மாத காலமாக செயலிழந்துள்ளதால் பொருட்களை பொதி செய்து மாத்தளையிலிருந்து ரயில் மூலம் தூர இடங்களுக்கு அனுப்பும் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு குறித்த தராசு பழுதடைந்துள்ளதால் பொதுமக்கள் தமது வர்த்தக பொருட்களை பொதி செய்து ரயில் மூலம் தூர இடங்களுக்கு அனுப்புவதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். அத்தோடு, பொதிகளுக்கு அறவிடப்பட்டு நாளாந்தம் ரயில்வே திணைக்களத்துக்கு கிடைக்கப்பெறும் வருமானமும் இதன் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விடயம் குறித்து மேற்படி ரயில்வே நிலையத்தின் உயரதிகாரியொருவர் தெரிவிக்கும் போது,

‘‘இங்கு பழுதடைந்து காணப்படும் தராசுக்குப் பதிலாக புதிய தராசொன்றைக் கொள்வனவு செய்வதற்காக தற்போது விலை மனு கோரப்பட்டுள்ளது’’- என்றார்.

# ‘உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்’

## பிரதியமைச்சர் பிரதீப் தைத்திருநாள் வாழ்த்து



‘உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்’ என்று மகாகவி பாரதி பாடியதிலிருந்து நாங்கள் உழவுத் தொழிலுக்கு எத்தனை முன்னுரிமையை வழங்கி வந்துள்ளோம் என்பதை உணரக்கூடியதாக உள்ளது என்று பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் விடுத்துள்ள தைத்திருநாள் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

‘உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்’ என்று மகாகவி பாரதி பாடியதிலிருந்து நாங்கள் உழவுத் தொழிலுக்கு எத்தனை முன்னுரிமையை வழங்கி வந்துள்ளோம் என்பதை உணரக்கூடியதாக உள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் பிரதான நோக்கம் எமது தாய்த் திருநாட்டில் கடந்த காலங்களில் அதிகம் முக்கியத்துவம் கொடுக்காத விவசாயத் துறையை மேம்படுத்தி அதற்கான முன்னுரிமையை வழங்கி மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதாகும்.

அதனடிப்படையில் ஐம்பூதங்களுடன் உழவுத் தொழிலுக்கு பெரிதும் கைகொடுக்கும் பசு முதலிய உயிரினங்களுக்கும் இயற்கைக்கும் மனிதருக்குமிடையிலான வலிமையான உறவை மென்மேலும் மெருகூட்டி அதனை எம் வாழ்வின் ஆதாரமாகக் கொண்டு அன்று முதல் இன்று வரை இயற்கை அன்னைக்கும் சூரிய பகவானுக்கும் நன்றி செலுத்தும் முகமாக உலகமெங்கும் வாழும் எம் தமிழ் உறவுகள் பன்னெடுங்காலமாக நன்றி செலுத்தும் பெருநாளாக இவ்வுழவர் திருநாளைக் கொண்டாடி வருகின்றனர்.

அந்த வகையில், 2025 ஆம் ஆண்டு தைத்திருநாள் இலங்கை வாழ் அனைத்து மக்களுக்கும் சௌபாக்கியம் நிறைந்த ஓர் ஆண்டாகவும் பொங்கும் இனிய பொங்கல் போல் யாவரதும் உள்ளம் பூரிப்படைந்து அனைவரது இல்லங்களிலும் எண்ணங்களிலும் மகிழ்ச்சி பெருகட்டும்.நம் முன்னோர் வாக்குப்படி, எண்ணப்படி ‘தை பிறந்தால் வழி பிறக்கும்’ என்பது மக்கள் மனதில் தொன்று தொட்டு இருந்து வரும் உறுதியான நம்பிக்கையாகும்- என்றுள்ளது.

# பல்கலை வளாகத்தில் தடைசெய்யப்பட்ட பொதுக்கூட்டம்; ஊடகங்களில் வெளியான செய்திகளில் உண்மையில்லை

## பல்கலைக்கழகத் உபவேந்தர் பேராசிரியர் டெரன்ஸ் மதுஜித் மறுப்பு

*(எம்.ஏ.அமீனுல்லா )*



சர்வதேச நாணய நிதியத்தின் சிக்கன வேலைத்திட்டத்தை எவ்வாறு தோற்கடிப்பது என்ற தொனிப்பொருளில் நடைபெறவிருந்த பொதுக்கூட்டம், பிரதமரின் அறிவுறுத்தலின் பேரில் பல்கலைக்கழக நிர்வாகத்தால் பல்கலைக்கழக வளாகத்தில் தடைசெய்யப்பட்டதாக ஊடகங்கள் வெளியிட்டுள்ள செய்திகளில் எதுவித உண்மைத்தன்மையும் கிடையாதென பல்கலைக்கழகத் உபவேந்தர் பேராசிரியர் டெரன்ஸ் மதுஜித் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான விளம்பரங்கள் மற்றும் சமூக ஊடகப் பதிவுகளின்படி இது ஒரு விரிவுரை, கலந்துரையாடல், மாநாடு, பயிற்சிப் பட்டறை அல்லது கல்வி நடவடிக்கையாக அல்லாமல், பொது விழிப்புணர்வுக்காக ஒரு பொதுக் கூட்டமாக ஏற்பாடு செய்யப்பட்டதென்பது தெளிவாகிறதெனவும் இந்தப் பொதுக்கூட்டத்தை நடத்துவதற்கு பல்கலைக்கழக நிர்வாகத்திடமிருந்து எந்தவித முன் அனுமதியும் பெறப்படவில்லையெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

குறித்த கூட்டத்தை பல்கலைக்கழக வளாகத்தில் நடத்துவதற்கு இடமளிக்கவில்லையென ஏற்பாட்டாளர்கள் உட்பட பல தரப்பினர் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பில் உபவேந்தர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

பல்கலைக்கழகத்துக்கு வெளியில் உள்ள சர்வதேச அரசியல் அமைப்பு மற்றும் பேராதனை பல்கலைக்கழக மாணவர் சங்கமொன்றின் தலையீட்டில் இந்தச் சந்திப்பை நடத்தவிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் எந்தவொரு மாணவர் செயற்பாட்டையும் ஏற்பாடு செய்வதற்கு முன்னர் பல்கலைக்கழகத் தலைமை ஒழுக்காற்றுக் குழுவினர், ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டாளர் மற்றும் பிற தொடர்புடைய அதிகாரிகள் மூலம் உபவேந்தரிடமிருந்து முன் அனுமதி பெறப்பட வேண்டும். இந்தப் பொதுக்கூட்டத்துக்கு எந்தவித முன் அனுமதியும் பெறப்படவில்லையென்பது தெளிவாக அவதானிக்கப்பட்டது. இந்த மாணவர் சங்கம் பல்கலைக்கழகத்தில் பதிவுசெய்யப்படவில்லை என்பதும் கடந்த பத்து வருடங்களில் எந்தவொரு செயற்பாடுகளையும் முன்னெடுக்கவில்லையென்பதும் மேலதிக விசாரணைகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வெவ்வேறு கருத்துகளைக் கொண்ட மாணவர்கள் மற்றும் பங்கேற்பாளர்களின் குழுக்களுக்கிடையேயான ஸ்லோகன் வகை தலைப்புகள் அது மோதல்களுக்கு வழிவகுக்குமென்றும் அவதானிக்கப்பட்டது.

அத்துடன், பல்கலைக்கழக அனுமதியின்றி, துண்டுப் பிரசுரங்கள் மற்றும் இதர பொருட்களை விநியோகித்தும் பீடத்தில் அனுமதியின்றி கூட்டங்களை ஏற்பாடு செய்தும் ஆசிரியர்களின் அன்றாட கல்வி நடவடிக்கைகளைச் சீர்குலைக்க இந்தச் சங்கங்கள் முயற்சித்துள்ளன.

பேராதனைப் பல்கலைக்கழகம் கல்விச் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கு விசாரணை மற்றும் அறிவுசார் ஈடுபாட்டின் கலாசாரத்தை வளர்ப்பதற்கும் அர்ப்பணிப்புடன் உள்ளது.

பல்கலைக்கழகத்தில் நடத்தப்படும் அனைத்து நடவடிக்கைகளையும் அதன் சட்ட, நெறிமுறை மற்றும் நிறுவனக் கட்டமைப்புக்குள் நடத்தும் போது, பல்வேறு தத்துவ மற்றும் ஆக்கபூர்வமான விவாதங்களை பல்கலைக்கழகம் ஊக்குவிக்கிறதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தொழிலாளர் வாழ்க்கையில் நன்மைகள் கிட்டட்டும்

## பொங்கல் வாழ்த்துச் செய்தியில் இ.தொ.கா. தவிசாளர் ரமேஸ்வரன் தெரிவிப்பு

*(தலவாக்கலை நிருபர்)*



‘‘தைத் திருநாளாம் தைப்பொங்கலைக் கோலாகலமாகக் கொண்டாடும் அனைத்து இந்து பெருமக்களுக்கும் உளம் நிறைந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்’’- என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ரமேஸ்வரன் தெரிவித்துள்ளார். அவர் விடுத்துள்ள தைத்திருநாள் வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

உழவர்களின் அறுவடைத் திருநாளாம் தைத்திருநாள், மகர சங்கராத்தியம் கொண்டாடப்படுகின்றது. சூரியனுடைய வடக்கிலிருந்து தெற்கு நோக்கிய பயணம்தான் மகர சங்கராத்தியம் என்று சொல்கின்றார்கள். எமக்கு மழையையும் வெயிலையும் கொடுத்து உதவுகின்ற சூரியனுக்கு சூரியப் பொங்கல் வைத்து சூரியனுக்கு நன்றி செலுத்துகின்ற ஒரு திருநாளாக இத்தைப்பொங்கல் அமைகின்றது.

பொங்கல் பொங்கி வருகின்றபோது நாம் அனைவரும் சௌபாக்கியமாக வாழ்வதாக ஐதீகம் சொல்லுகின்றது. பொங்கல் பலவிதமானது. போகிப் பண்டிகை, தைப்பொங்கல், மாட்டுப்பொங்கல், காணும் பொங்கல் என பலவிதமான பொங்கல்களைக் கொண்டாடுகின்றோம். எனவே, தொழிலாளர்களின் வாழ்க்கையில் தீமைகள் விலகி நன்மைகள் ஏற்படட்டும். மேலும் மக்களிடையே புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு போன்ற எண்ணங்கள் உருவாகி எமது மக்கள் சிறப்பாக வாழ்வதற்கும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போம் என்றும் தெரிவித்துள்ளார்.



தைப்பொங்கல் விழா வலப்பனை கல்வி வலயத்துக்குட்பட்ட மந்திரிதென்ன, விடுதுகல சிங்கள பாடசாலையின் அதிபர் ஜமுனாகுமாரி தலைமையில் கடந்த (09) இடம்பெற்றது. பாடசாலைச் சமூகமும் தமிழ் கலாசார உடைகளை அணிந்து தமிழ் கலாசாரத்துடன் தைப்பொங்கல் விழாவைக் கொண்டாடின. (தலவாக்கலை நிருபர்)

## இந்து மகளிர் சங்கத்தின் தைப்பொங்கல் விழா

*(ஜே.எம்.ஹாபீஸ்)*

கண்டி இந்து மகளிர் சங்கம் ஒழுங்கு செய்துள்ள தைப்பொங்கல் தின விழா எதிர்வரும் சனிக்கிழமை கண்டியில் இடம்பெறவுள்ளது.

கண்டி கே.சி.சி. கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள சஹஸ் உயன பூங்காவில் இது இடம்பெறவுள்ளது. காலை 9.30 மணிக்கு இவ்வைபவம் ஆரம்பமாகும். பிரதம அதிதியாக கண்டியிலுள்ள இந்திய உதவித் தூதுவர் திருமதி வீ.எஸ். சரன்யா கலந்துகொள்வார்.

கண்டி இந்து மகளிர் சங்கத்தின் தலைவி ஆர். கலையரசி தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் விசேட அதிதிகளாக கண்டி மாநகர ஆணையாளர் திருமதி இந்திகா அபேசிங்க, கண்டி தேசிய வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் திருமதி இரேசா பெர்னாண்டோ மற்றும் கண்டி நகர வர்த்தகப் பிரமுகர்கள் ,பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

# தைப்பொங்கல் சிறப்பிதழ்

## இத் தை உழவரின் தை

நிலத்தையுழுது
நெற்றங்கத் தை
விதைத்த – எங்கள்
நற்சிங்கத் தை!

எத்தை வந்தாலும்
அத்தை மகளுக்கு
பொங்கல் விருந்தை
ஆக்கிப் படைக்கும்
வித்தைக் காரனது
இத்தைப் பொங்கல்!

நிலத்தைக் கிழித்து
நெல் மணியை விதைத்து
நீரதைப் பாய்ச்சி
பயிரதை வளர்த்து
பருவம் அறிந்து

கதிரையறுத்து
புதுரையெடுத்து
அன்னக் குறையா
செல்வத்தை – உழவன்
அள்ளிச் சொரிந்ததை!

இத்தை ஒரு
அருந்தை பெருந்தை
அத்தை பெற்ற
சொத்தை வைத்து
வித்தை காட்டும் – இத்தை
உழவனின் தை!

பாண்டியூர்
பொன். ஏ.பீ.என்.நவநீதன்










தமிழன்

# தைப்பொங்கல் சிறப்பிதழ்

## நன்றி கூறும் நற்பண்பை வளர்க்கும்

# உழவர் திருநாளாம் தைத்திருநாள்

மிருணாளினி நடராஜன்

தமிழர்களின் விருந்தோம்பல், நன்றி கூறுதல், எல்லோருக்கும் மதிப்பளித்தல் போன்ற நற்பண்புகளைப் பிரதிபலிக்கும் ஓர் உன்னத திருநாளாக தைப்பொங்கல் அமைகின்றது.

சூரிய பகவான், ஒரு வருடத்தின் காலநிலையை வரையறுத்து மழைவீழ்ச்சியையும் பயிர்கள் வளர்வதற்குத் தேவையான - சாதகமான காலநிலையையும் ஏற்படுத்திக் கொடுப்பதால் உலகில் மானிடர்கள் மட்டுமன்றி, ஏனைய உயிரினங்களும் உயிர் வாழ்வதற்கு ஓர் உயிர் கொடுக்கும் சக்தியாக இருந்துவருகிறார்.

உலகில் வாழ்ந்துகொண்டிருக்கும் மானிடப் பிறவிகளான நாம், சூரிய பகவானைத் துதித்து வழிபடவேண்டிய நிலையில் இருக்கின்றோம். சூரிய பகவானின் அனுக்கிரகத்தால்தான் உலகில் பயிர்கள் செழித்து வளர்ந்து எமக்குத் தேவையான உணவைப் பெற்றுக்கொடுக்கின்றன.

நதிகளிலிருந்தும் நீர்த்தேக்கங்களில் இருந்தும் நீரைப் பயன்படுத்திய விவசாயப் பெருங்குடி மக்கள் தங்கள் விளைச்சல் நிலங்களைப் பொன் விளையும் பூமிகளாக மாற்றுகின்றார்கள்.

நாற்சதுரமாக நாற்புறமும் வாசல் வைத்து, கோலம் போட்டு குறிக்கப்பட்ட இடத்தை புனித இடமாக மதிப்பார்கள். கோலம் போடப்பட்ட இடத்தைச் சுற்றி நான்கு கம்புகள் நட்டு அதில் நூல் கட்டி தோரணம், மாவிலை தொங்கவிடுவார்கள். கோலமிட்டு புனிதமாக்கிய இடத்தின் நடுவில் புதிதாக மண்ணால் பிடித்துவைத்த மூன்று அடுப்புக் கற்களையும் வைத்து பொங்கல் பானை வைப்பதற்கு அடுப்பைத் தயார்படுத்துவார்கள். சூரிய பகவானுக்கு



பொங்கல் பொங்கும் முன் வீட்டின் பூஜையறையில் தீபமேற்றி வணங்கிய பின் சூரிய பொங்கலை ஆரம்பிப்பார்கள்.

குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் ஒன்றுகூடி ஸ்தோத்திரங்கள் பாடி நிற்க, சாணத்தால் பிள்ளையார் பிடித்து வைத்து (பிள்ளையார் சிலையும் வைக்கலாம்), நிறைகுடம் வைத்து, குத்துவிளக்கேற்றி, தேங்காய் உடைத்து தூபம், தீபம் காட்டி விநாயகரை வழிபட்ட பின், அடுப்பில் நெருப்பு மூட்டி, புதுப்பானையின் கழுத்தில் மாவிலை, இஞ்சி இலை, மஞ்சள் இலைகளைக் கட்டி (காப்புக் கட்டி), விபூதிக்குறிகள், திலகமிட்டு புனிதமாக்கி அதனுள் நீரும், பசும்பாலும் விட்டு அடுப்பில் பொங்க வைப்பார்கள்.

பால் பொங்கி வழியும்வரை நெருப்பை எரிய விடுவார்கள். பால் பொங்கி வழியும்போது கடவுளை வணங்கி "பொங்கலோ பொங்கல்" என ஆரவாரித்து வீட்டுத் தலைவர் இரு கைகளினாலும் புது அரிசியைக் கிள்ளி மூன்று தடவைகள் வலப்புறமாகச் சுற்றி பானையிலிட்டு மகிழ்ச்சியுடன் பொங்கலிடுவார்கள்.

சர்க்கரைப் பொங்கலாயின், பயிற்றம் பருப்பு, சர்க்கரை, மரமுந்திரிகை, ஏலக்காய் முதலியவற்றை போட்டு பொங்கல் செய்வார்கள். பொதுவாக தைப் பொங்கலின்போது சர்க்கரைப் பொங்கலே பொங்குவது வழக்கம். ஆனால், சிலர் வெண்பொங்கலும், சாம்பாரும் வைப்பார்கள். சிறுவர்கள் வெடிகளைக் கொளுத்தி, மகிழ்ச்சியோடு ஆடிப் பாடுவர்.

பால் பொங்கி அரிசி போட்டபின் பானையிலிருக்கும் மிதமிஞ்சிய நீரை ஒரு சுத்தமான பாத்திரத்தில் எடுத்து அதனை பூஜைகள் முடியும் வரை வைத்திருந்து அதனை மாவிலை கொண்டு வீட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் படும்படியாக தெளிப்பார்கள். அந்நீரில் சூரியனின் சக்தி இருப்பதால், சூரிய பகவானின் சக்தி எல்லா இடங்களிலும் பட்டுப் பிரகாசிக்கும் (தோஷங்கள் நீங்கும்) என்பது அவர்களின் நம்பிக்கை.

வேளாண்மைக்கு வேண்டிய மழைநீரையும் சூரிய ஒளியையும் (வெயிலையும்) காற்றையும் தேவைக்கேற்ப வழங்கி தம்மையும் நாட்டையும் செழிப்புடன் வாழ உதவிய இயற்கைக்கும் (பூமி, சூரியன், வளிமண்டலம், நீர்நிலைகள் போன்றவற்றுக்கும்) தம்மோடு சேர்ந்து கஷ்டப்பட்டு உழைத்த கால்நடைகளுக்கும் தொழிலாளர்களுக்கும் தமது நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவிக்கும் விழாவாக உழவர்களால் இப்பொங்கல் விழா கொண்டாடப்பட்டு வந்துள்ளது.

தற்பொழுது பொங்கல் விழாவானது முன்புபோல் வீடுகளில் மட்டுமன்றி ஆலயங்கள், கல்விக்கூடங்கள், தொழில் நிலையங்களிலும் இந்துக்களல்லாத தமிழ் மக்களாலும் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருவதால் தமிழர் பண்டிகையாக எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு சிறப்படைகின்றது.

தைப்பொங்கல் பண்டிகையின்போது உழவர்கள் தாம் அறுவடைசெய்த நெற்கதிர்களை அரிசியாக்கி அதில் பொங்கல் செய்து கொண்டாட, பல்வேறு தொழில் புரிவோர் உழவர்களுடன் பண்டமாற்று செய்து புதிய அரிசியை வாங்கிப் பொங்கல் பொங்கிக் கொண்டாடுகின்றார்கள்.

இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்த தமிழர்களும் இந்தியத் தமிழர்களும் அதிகமாக வாழும் கனடாவிலுள்ள மிகப்பெரிய 'மார்க்கம்' மாநகர சபை ஒவ்வொரு வருடமும் ஜனவரி 13ஆம், 14ஆம், 15ஆம் திகதிகளை தமிழர்களின் பாரம்பரிய நாட்களாகவும் தைப்பொங்கல் பண்டிகையைப் பாரம்பரிய விழாவாகவும் அங்கீகரித்துள்ளதுடன், தை மாதத்தை தமிழர்களின் புனித மாதமாகவும் பிரகடனப்படுத்தியுள்ளது.


இதன்மூலம் கனடாவில் ஒரு தமிழர் பண்டிகையையும் அதனோடு தொடர்புடைய மாதத்தையும் அதிகாரபூர்வமாக அங்கீகரித்த முதல் வெளிநாட்டு மாநகர சபை என்ற பெருமையை மேற்படி 'மார்க்கம் நகர சபை' பெற்றுள்ளது.

உழவர்கள் மார்கழி மாதத்தில் (தைப்பொங்கலுக்கு முன்னர்) ஒரு நல்ல நாள் பார்த்து 'புதிர் எடுத்தல்' நிகழ்வை நடத்துவார்கள். குடும்பத்தலைவர் குறிப்பிட்ட ஒரு நல்ல நாளில் காலையில் குளித்து கடவுளை வணங்கி வயலுக்குச் சென்று வயல் வரம்பில் முதற்கடவுளான பிள்ளையாரை வைத்து பூ, பழம், பாக்கு, வெற்றிலை ஆகியவற்றைப் படைத்து தேங்காய் உடைத்து விநாயகரையும் குலதெய்வத்தையும் வணங்கி, அதன் பின்னர் அறுவடைக்குத் தயாராக இருக்கும் நெற்கதிர்களில் சிறிதளவை வெட்டி வீட்டுக்குக் கொண்டுசெல்வார். இதேநேரம் குடும்பத்தலைவி குளித்து, வீடு பெருக்கி, கழுவி, மெழுகி புதிர் வாங்குவதற்குத் தயாராக இருப்பார்.

தலைவன் கொண்டுவருகின்ற நெற்கதிர்களை மனையாள் வாங்கி பூஜையறைக்குக் கொண்டுசெல்லும் வழக்கம் உண்டு. அதன் பின்னர் கடவுளை வணங்கி புதிய நெற்கதிர்களை பூஜையறை மற்றும் சமையல் அறைகளில் கட்டித் தொங்கவிடுவார்கள். மிகுதியாக உள்ள நெற்கதிர்களை அரிசியாக்கி தைப்பொங்கலுக்காக வைத்திருப்பார்கள். கடின உழைப்பின் மூலம் கிடைக்கப்பெற்ற நெற்கதிர்களை நல்ல நாளில் 'புதிர்' எடுப்பதன் மூலம் வருடம் முழுவதும் அவர்களுக்கு சாப்பாட்டுக்கு குறைவிருக்காது என்பது அவர்களுடைய நம்பிக்கையாகும்.

11ஆம் பக்கம் பார்க்க...








# தைப்பொங்கல் சிறப்பிதழ்



# நன்றிகூறும் நற்பண்பை



10ஆம் பக்கத் தொடர்ச்சி...

தைப்பொங்கல் தினத்தன்று ஒவ்வொரு குடிமகனும் தம் வீட்டுப் பொங்கல் படையல் சூரியன் உதிக்கும்போதே முதல் நல்விருந்தாக அமையவேண்டும் என்ற ஆதங்கத்தில் அதிகாலையே விழித்தெழுந்து பொங்கலுக்கான ஆயத்தங்களைச் செய்வார்கள்.

எல்லோரும் அதிகாலையில் குளித்து, வீடு பெருக்கி, கழுவி, முற்றம் கூட்டி, வாசலில் சாணம் கொண்டு மெழுகி அதில் உலக்கை வைத்து அரிசி மா, மஞ்சள் மாவால் அல்லது செங்கட்டி மண்ணால் கோலம் போடுவார்கள். முற்றம் சீமெந்தாலானதாயின் அதனை சுத்தம் செய்து கழுவி கோலம் போடுவார்கள். அத்துடன், வீட்டு வாசலில் (கதவு நிலையில்) மாவிலை கட்டி சூரிய பகவானை வரவேற்கத் தயாராக இருப்பார்கள்.

புதுமனை, புதுமணமக்கள் இருப்பவர்கள் பொங்கல் விழாவை “தலைப்பொங்கல்” என வெகுசிறப்பாகக் கொண்டாடுவார்கள். வீட்டுக்கு வெள்ளையடித்து, வீட்டை அலங்கரித்து, தாமும் புத்தாடை அணிந்து சூரிய பகவானின் ஆசியைப் பெறுவதில் கண்ணும் கருத்துமாக இருப்பார்கள். துக்கமான நிகழ்வுகள் நிகழ்வுற்ற குடும்பத்தினர் பொங்கல் விழாவை ஒரு வருடத்துக்குத் தவிர்த்துக்கொள்வார்கள்.

பொங்கிய பொங்கலை ஒரு தலைவாழை இலையில் படைத்து அதன் மேல் பகுதியை குழியாக்கி அதன்மேல் வாழைப்பழத்தை உரித்து வைத்து அதன் மீது தயிர் விட்டு, சர்க்கரையும் வைப்பார்கள். பலகாரங்களை (வடை, மோதகம், முறுக்கு என்பனவற்றை) இன்னொரு தலைவாழை இலையிலும் சுத்தம் செய்த பழங்களை வேறொரு தலைவாழை இலையிலும் படைப்பார்கள்.

படையல் படைக்கும்போது சூரியனுக்கு வலப்பக்கத்தில் இலையின் அகன்ற பகுதி இருக்கும்படி படைத்தல் வேண்டும்.

வாழை இலைகளில் படைத்த பின், தேங்காய் உடைத்து வைத்து சூரிய பகவானுக்கு தூப, தீபம் ஆரத்தி எடுத்து அனைவரும் பக்தியோடு பஜனை பாடி சூரியனை வணங்குவார்கள். சூரியனுக்கு படைத்த (படையல்) பொங்கலை அனைவரும் சேர்ந்து உண்டு மகிழ்ந்து பொங்கல் தினத்தை சிறப்பாக கொண்டாடுவார்கள்.

உறவினர்கள், நண்பர்கள் துக்க நிகழ்வுகள் (ஆசூசம்) அல்லது வேறு சமூகத்தவர் என்னும் காரணமாக பொங்காது இருந்தால் அவர்களுக்கும் தமது பொங்கலை பரிமாறி அவர்களையும் மகிழ்விப்பார்கள். பொங்கல் பண்டிகை நாளில் ஊரில் பல பாகங்களிலும் தமிழரின் பாரம்பரியத்தை பறைசாற்றும் வகையில் முத்தமிழ் (இயல், இசை, நாடக) கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும். அவற்றிலும் மக்கள் பங்கேற்று மகிழ்ச்சி பொங்குவர்.

**“பட்டிப் பொங்கல்/மாட்டுப் பொங்கல்”**





பொங்கல் தினத்துக்கு அடுத்தநாள் “பட்டிப் பொங்கல்/மாட்டுப் பொங்கல்” தினமாக உழவுத் தொழிலுக்கு உறுதுணையாக விளங்கும் ஆவினத்துக்கு நன்றி கூறும் கொண்டாடும் வழக்கமும் அவர்களிடம் உண்டு.

உழவனின் நண்பனாக இருந்து உழைத்த (மாடாக உழைத்த) மாடுகளுக்கு நன்றி செலுத்தும் முகமாக பட்டிப் பொங்கல் கொண்டாடும் மரபு காணப்படுகிறது.

அன்றைய தினம் மாடுகளைக் குளிப்பாட்டி, விபூதி குறிகள் வைத்து, சந்தனம், குங்குமத்தால் பொட்டிட்டு, மலர் சாத்தி அல்லது மலர்மாலை அணிவித்து, மாட்டின் கொம்புகளுக்கு வர்ணம் பூசி அலங்கரித்து “பொங்கலோ பொங்கல், பட்டிப் பொங்கல் மனசு பெருக, பால் பானை பொங்க, நோயும் பிணியும் தெருவோடு போக” என்று மாட்டுத்தொழுவத்தில் பொங்கல் பொங்கி மாட்டை கடவுளாக மதித்து அதற்கு படையல் படைத்து உண்ணக் கொடுத்து, தாமும் உண்டு மகிழ்வர்.

மாடு உண்ட எச்சில் தண்ணீரை தொழுவத்தில் தெளிப்பார்கள். பட்டிப்பொங்கலின்போது கிராமங்கள் தோறும் ஜல்லிக்கட்டு போன்ற விளையாட்டுகளிலும் மக்கள் கலந்துகொண்டு மகிழ்வார்கள்.

**அருவி வெட்டு:**

வீட்டு சாமியறையிலும் சமையலறையிலும் கட்டப்பட்ட “புதிர்” நெல் அடுத்த வருடம் புதிர் எடுக்கும் வரை அப்படியே இருக்கும். பொதுவாக பொங்கல் தினம் முன்பாகவே அருவி வெட்டு நிகழ்ந்திருக்கும். அல்லது நெல் விளையாது இருந்திருந்தால் பொங்கல் முடிவடைந்த பின்னர் வசதியான ஒரு நாளில் “அருவி வெட்டு” இடம்பெறும்.

பொதுவாக விதைக்கப்பெற்ற நெல்லின் வர்க்கத்தைப் பொறுத்தே அதன் விளைவு காலம் இருக்கும்.

சில நெல் 3, 4 மாதங்களில் பூரண விளைவை அடைந்து விடும். பாடுபட்டு உழைத்த உழைப்பின் மூலம் கிடைத்த நெற்கதிர்களை அறுத்து காயவைத்து “சூடடிப்பார்கள்”. சூடடிப்புக்கு முற்காலத்தில் மாடுகளே அதிகம் பயன்படுத்தப்பட்டன. ஆனாலும் தற்காலத்தில் உழவு இயந்திரங்களின் பயன்பாடு அதிகமாகக் காணப்படுகிறது. எந்த முறை மூலம் என்றாலும் சூடடித்த நெற்தானியங்களை வீட்டுக்குக் கொண்டு சென்று சாமியறைகளில் வைக்கும் வழக்கம் இன்றும் அங்கு காணப்படுகிறது.

நெல் தானியம் என்பது செல்வங்களுள் முக்கியமான ஒன்றாக அவர்களால் கருதப்படுகிறது. எனவே, இறைவன் இருக்கும் இடத்தில்தான் செல்வம் இருக்கவேண்டுமென்பது அவர்களுடைய கருத்தாகும். அதனால் சாமியறையில் தங்கள் உழைப்பின் மூலம் கிடைக்கப்பெற்ற செல்வங்கள் அனைத்தையும் மூடைகளாக கட்டி வைக்கிறார்கள்.

சூடு அடிக்கப்பெற்றபின் எஞ்சியிருக்கும் வைக்கோலைக் காயவைத்து, கால்நடைகளுக்கு உணவுத் தட்டுப்பாடான நேரம் கொடுப்பதற்காக குவியலாக குவித்து வைப்பார்கள். புதிர்களை எடுத்து அவற்றை இளம் பசுக்கன்றின் சாணத்துடன் சேர்த்துக் குழைத்து அதனைக் காயவைத்து விபூதி செய்வதற்காக பாவிக்கின்றார்கள்.

அறுவடை மூலம் கிடைக்கும் நெல்லில், தமக்கு உதவி புரிந்த தொழிலாளர்களுக்கும் பகிர்ந்து கொடுத்தபின், தமக்குத் தேவையானவற்றை சேமித்து வைக்கிறார்கள். மிகுதியானவற்றை விற்றுவிடுவார்கள். அவர்களின் உழைப்பின் மூலம் கிடைக்கின்ற செல்வம் தை மாதத்தில் கிடைக்கப் பெறுவதனால் போலும் “தை பிறந்தால் வழி பிறக்கும்” என்ற பழமொழி தோற்றம் பெற்றிருக்கிறது. தை மாதத்தில் அவர்களிடம் பணப்புழக்கம் அதிகமாகக் காணப்படும்.

இதன் காரணமாக திருமணங்கள் போன்ற நல்ல நிகழ்ச்சிகளை அதிகமாக தை மாதத்தில் தமிழர்கள் நடத்துவார்கள். ஆண்டுதோறும் தை மாதம்முதல் ஆனி மாதம் வரையுள்ள ஆறு மாதங்கள் உத்தராயணம் என்றும் ஆடி முதல் மார்கழி வரையுள்ள மாதங்கள் தட்சிணாயனம் என்றும் கூறப்படுகிறது. இதில் தை மாதம் முதலாம் திகதியை மகர சங்கராந்தி, தைப் பொங்கல் என்று கொண்டாடுகிறோம்.

“உழவர் சேற்றில் கால் வைத்தால்தான் ஏனையோர் சோற்றில் கை வைக்க முடியும்” என்பது பலரும் அறிந்த பழமொழி.

அதனால் போலும் பொங்கல் என்பதற்கு ‘பொங்கி வழிதல்’, ‘பொங்குதல்’ என்பது பொருள். அதாவது புதிய பானையில் பால் பொங்கி எழுந்து பொங்கி வழிந்து வருவதால், எதிர்காலம் முழுவதும் நம் வாழ்வும் வளமும் அந்தப் பால் போன்று பொங்கிச் சிறக்கும் என்பதும் களனியெல்லாம் பெருகி, அறுவடை மென்மேலும் அதிகரிக்கும் என்பதும் இந்தப் பண்டிகையின் மேலோங்கிய தத்துவமும் தொன்றுதொட்டுவரும் நம்பிக்கையுமாகும்.









# சம்மாந்துறையில் மின்சாரம் தாக்கி ஒருவர் மரணம்

(திகாமடுல்ல செய்தியாளர்)

வீட்டில் வேலைசெய்து கொண்டிருந்த போது மின்சாரம் தாக்கி ஆணொருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று திங்கட்கிழமை (13) முற்பகல் நடைபெற்றுள்ளது.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சென்னக் கிராமம் பகுதியில் வீட்டுவேலை செய்துகொண்டிருந்தபோது மின்சாரம் தாக்கி மலையடிக்கிராமம் 03 ஆம் பகுதியைச் சேர்ந்த 60வயதான நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நீண்ட காலமாகத் தடுத்துவைக்கப்பட்ட அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரி திருமலையில் கையெழுத்துப் போராட்டம்





(கிண்ணியா செய்தியாளர்)

பல வருடங்களாக விசாரணையின்றி சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரிய கையெழுத்துப் போராட்டம் திருகோணமலை சிவன்கோயிலடிக்கு முன்னால் நேற்று திங்கட்கிழமை (13) இடம்பெற்றது.

போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த கையெழுத்து வேட்டையில் பலர் கலந்துகொண்டு கையெழுத்திட்டனர். குறித்த கையெழுத்துப் போராட்டமானது வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உள்ளிட்ட பல மாவட்டங்களிலும் இடம்பெறவுள்ளதாக ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த இராவண சேனா அமைப்பின் தலைவர் கு.செந்தூரன், ''அரசியல் கைதிகள் பல வருட காலமாக சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கான விசாரணைகளின் பின்னர் பலரும் விடுவிக்கப்பட்டு மீண்டும் கைதிகளாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இவர்களை புதிய அரசாங்கம் விடுதலை செய்ய வேண்டும். தமிழ் மக்களின் குரலைக் கேட்டு அரசாங்கம் செவிசாய்த்து உடனடியாக விடுதலை செய்யக்கோரியே இந்தக் கையெழுத்துப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளோம்''.

''ஐந்து ஆண்டுகள் தொடக்கம் முப்பது ஆண்டுகள் வரை தடுத்துவைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை மற்றும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டவர்களை இந்த அரசாங்கம் சுதந்திர தினத்தன்றாவது விடுதலை செய்ய வேண்டும். ஜனாதிபதி யாழ். மண்ணில் வைத்து தேர்தல் பிரசாரத்தின்போது வாக்குறுதியளித்ததைப் போன்று பொது மன்னிப்பு அடிப்படையில் விடுதலை செய்ய வேண்டுமென ஜனாதிபதி மற்றும் நீதி அமைச்சரிடமும் கேட்டுக் கொள்கின்றோம்''- என்றார்.

இந்தக் கோரிக்கைக்கான மகஜரை சட்ட மா அதிபர், நீதியமைச்சர், ஜனாதிபதியிடமும் கையளிக்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# இறந்த நிலையில் மீட்கப்பட்ட யானை



(சீனக்குடா செய்தியாளர்)

சம்பூர் பொலிஸ் பிரிவிலுள்ள சந்தனவெட்டை காட்டுப்பகுதியில் சிறிய பள்ளமொன்றில் யானையொன்று இறந்த நிலையில் நேற்று (13) மீட்கப்பட்டது.

குறித்த யானையானது இரண்டு தினங்களுக்கு முன்னர் இறந்திருக்கலாமென சந்தேகிக்கப்படுகின்ற அதேவேளை, இது எவ்வாறு உயிரிழந்ததென்பது தொடர்பில் கண்டறியப்படவில்லை.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்பூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.




திருவாசகம் முற்றோதல் பாண்டிருப்பு ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்றது. கல்முனைப் பிராந்திய சிவசங்கரி திருமுறை ஓதுவோர் சங்கம் ஆலய அறங்காவலர் சபையோடு இணைந்து இத்திருவாசகம் முற்றோதல் நிகழ்வை ஏற்பாடு செய்து பிரதேசத்திலுள்ள இந்து ஆலயங்களில் நடத்திவருகின்றது. இங்கு மாணிக்கவாசகர் அருளிச்செய்த 51 பதிகங்கள் ஓதுவோர்களினால் ஓதப்பட்டது. மாணிக்கப்பிள்ளையார் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ இராசசிங்கம் குருக்கள் தலைமையில் விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற்றன. (பாண்டிருப்பு செய்தியாளர்)




மட்டக்களப்பு ,திருப்பழுகாமம் ஸ்ரீ சிவன் ஆலயத்தில் திருவெம்பாவை இறுதி நாளான நேற்று (13) தீர்த்தம் ஆடுதல் நிகழ்வு பக்தர்கள் புடைசூழ இடம்பெற்றது. (பழுகாமம் செய்தியாளர்)

# பஸ்களிலுள்ள மேலதிக அலங்காரப் பொருட்களை தடைசெய்யக்கோருவது வாழ்வாதாரத்தை அழிக்கும் செயல்

## திருமலை தனியார் பஸ் வரையறுக்கப்பட்ட சங்கம் தெரிவிப்பு

(கிண்ணியா செய்தியாளர்)

பஸ்களில் மேலதிகமாக உள்ள அலங்காரப் பொருட்களைத் தடைசெய்யக்கோருவது வாழ்வாதாரத்தை அழிக்கும் செயல் என திருகோணமலை மாவட்ட தனியார் பஸ் வரையறுக்கப்பட்ட சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் நேற்று(13) திருகோணமலை குளக்கோட்டன் மண்டபத்தில் இடம்பெற்ற குறித்த சங்கக் கூட்டத்தின் பின் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தது.

இச்சங்க உறுப்பினர் இது குறித்து தெரிவிக்கையில்,

''ஆபத்தை ஏற்படுத்துமென்றால் அந்த மேலதிக பொருட்களையும் தடை செய்யலாம். வீதிப் பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடுவதை



விட பிரத்தியேக (ஹயர்) வாடகையால் வரும் வருமானமே அதிகம். வாகனத்தை வாடகைக்கு அமர்த்தும்போது ஆசன இருக்கை, அதன் அலங்காரத்தைப் பொறுத்தே முன்னுரிமைப்படுத்தி அதனைப் பதிவு செய்வார்கள். இதனை விடுத்து ஒன்றுமில்லாமல் மரண வீட்டுக்குச் செல்வது போன்று இருந்தால் யாரும் வாடகைக்கமர்த்த மாட்டார்கள்.

வாகனத்தில் உள்ள வெள்ளிரும்பு, தொலைக்காட்சி, மின்குமிழ் போன்றன மக்களுக்கு பாதிப்பில்லாமல் உள்ளதுடன் எமது தொழிலைச் செய்து கொண்டு செல்கிறோம். இதை விடுத்து அரசாங்கம் மேலதிக பொருட்களை அகற்றச் சொல்வதானது எமது வாழ்வாதாரமும் அழிக்கப்படுவதுடன் அலங்கார வெள்ளிரும்பு பொருட்களை விற்பனை செய்பவர்களின் வாழ்வாதாரமும் அழிக்கப்படுகிறது'' - என்றார்.

குறித்த கலந்துரையாடலில் பஸ் உரிமையாளர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# தையல் இயந்திரம் வழங்கிவைப்பு



(கல்குடா செய்தியாளர்)

கிழக்கு மாகாண சபையின் விசேட அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கான ஐந்து நாள் தையல் பயிற்சி நெறியை நிறைவு செய்தோருக்கான தையல் இயந்திரங்கள் வழங்கும் நிகழ்வு ஓட்டமாவடி பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

மாவட்ட சமுக சேவை உத்தியோகத்தர் ஏ.எம்.எம்.அலியார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் ஏ.தாஹிர், கிழக்கு மாகாண சபை சேவைகள் திணைக்கள பணிப்பாளர் யூ.சிவராசா, உதவிப் பிரதேச செயலாளர் எம்.ஆர்.ஷியாஉல் ஹக், உத்தியோகத்தர்களான ஏ.நஜீம், எஸ்.ஜெயசேகர், எம்.சிவலிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதன்போது 60ஆயிரம் ரூபா பெறுமதியான தையல் இயந்திரங்கள் 19 பயனாளிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டன. ஓட்டமாவடி, வாழைச்சேனை கிரான், செங்கலடி, கோறளைப்பற்று மத்தி மற்றும் வாகரை ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் இருந்து பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களைச் சேர்ந்த 19 பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு உலருணவுப் பொதி வழங்கல்



(வாழைச்சேனை மேலதிக செய்தியாளர்)

கிழக்கு மாகாணத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான 02 மில்லியன் ரூபா பெறுமதியான உலருணவுப் பொதி வழங்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (12) வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் இடம்பெற்றது.

சர்வதேச லயன்ஸ் கழகத்தின் மாவட்டம் 306, C 2 இன் ஏற்பாட்டில் கிடைக்கப்பெற்ற உதவியின் அடிப்படையில் மாற்றுத்திறனாளிகள் உட்பட பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள், புதிய ஆடைகள், நவீன சமையல் அடுப்புகள் மற்றும் சமைத்த உணவுகளும் வழங்கப்பட்டன.

துமாங்கேணி, கிருமிச்சை, பணிச்சங்கேணி, வாகரை, தட்டுமனை, கதிரவெளி, புனாணை என பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு இவ்வுதவி வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் மாவட்ட ஆளுநர் லயன் ரஞ்சித் பெர்னாண்டோ, D 10 மாவட்டத்துக்கான ஆளுநர் லயன் ஆதித்தன், D10 மாவட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்ட வருங்கால ஆளுநர் லயன் கே.லோகேந்திரன், L.C.F. இணைப்பாளர் லயன் லலித்குமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அத்துடன், மட்டக்களப்பு மாவட்டத்துக்குரிய 09 லயன்ஸ் கழகத் தலைவர்கள், அதன் உறுப்பினர்கள், ஆளுநர் சபை உறுப்பினர்கள், லியோ கழகத்தின் தலைவர்கள், அதன் உறுப்பினர்கள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

# கல்முனை சாஹிரா பழைய மாணவர்களின் முயற்சியில் மலசலகூடங்கள் கையளிப்பு



(பொலிவேரியன் செய்தியாளர்)

கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையில் கல்வி பயின்ற பழைய மாணவர்களான எம்.எம்.எம்.அம்ஸத், ஏ.எச்.பௌசுல் அமீன், ஏ.சீ.ஏ.மஸாஹிர், ஏ.ஆர்.எம்.றீசா ஆகியோரின் முயற்சியால் சுமார் ஒரு கோடி ரூபாவுக்கு மேற்பட்ட செலவில் நவீன வசதிகளுடன் கூடிய 40 மலசலகூடங்கள் புனர்நிர்மாணம் செய்யப்பட்டும் 04 மலசலகூடங்கள் புதிதாக அமைக்கப்பட்டும் மொத்தமாக 44 மலசலகூடங்களைக் கையளிக்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை (10) பாடசாலையில் இடம்பெற்றது.

கல்லூரி அதிபர் எம்.ஐ.ஜாபிர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், இவ்வேலைத்திட்டத்தை துரித கதியில் மேற்கொண்டு அதனைத் திறம்பட முடித்த மேற்குறிப்பிட்ட பழைய மாணவர்களும் கலந்துகொண்டு உத்தியோகபூர்வமாக மாணவர்கள் மற்றும் அதிபர், ஆசிரியர் குழாத்தினரின் பாவனைக்கு உதவும் வகையில் கையளித்தனர்.

கொழும்பைச் சேர்ந்த பெயர் குறிப்பிட விரும்பாத தனவந்தர் ஒருவரினால் இப்பாரிய வேலைத்திட்டம் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதன்போது அதிபர் குழாத்தினரால் பழைய மாணவர்கள் நினைவுச் சின்னம் வழங்கி, பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில், பாடசாலை அபிவிருத்திக் குழுச் செயலாளர் டாக்டர் சனூஸ் காரியப்பர், முகாமைத்துவக் குழு, பகுதித் தலைவர்கள் மற்றும் ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# 'Data science Association of Akkaraipattu' ஆரம்பித்து வைப்பு



(மீராநகர் செய்தியாளர்)

அக்கரைப்பற்றில் உள்ள Data science (தரவு தொகுப்புவியல்) மற்றும் artificial intelligence (செயற்கை நுண்ணறிவு) துறையைச் சேர்ந்த பட்டதாரிகள், நிபுணர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் ஆகியோர் ஒன்றிணைந்து இப்பிராந்தியத்தில் இத்துறையில் எதிர்காலத்தில் செய்யவுள்ள வேலைத்திட்டம் குறித்து அது தொடர்பில் விழிப்புணர்வு பற்றி தெரிவிக்கும் ஊடக சந்திப்பு ஞாயிற்றுக்கிழமை (12) அக்கரைப்பற்று மென்கோ கார்டனில் இடம்பெற்றது.

பிரித்தானிய பல்கலைக்கழக தரவு தொகுப்புவியல் விரிவுரையாளர் கலாநிதி றக்கீப் ஜஃபர் தலைமையில் நடைபெற்ற இச்சந்திப்பின் போது அவர் குறிப்பிடுகையில், ''இத்துறை தற்போது உலகில் மிக வேகமாகப் பரவி வருகின்ற துறையாகும். இத்துறையில் தற்போது அக்கரைப்பற்றில் சுமார் 30க்கும் அதிகமான பட்டதாரி மாணவர்கள் இருக்கின்றார்கள். இப்பிராந்திய பாடசாலை ஆசிரியர்களுடன் இம்மாணவர்கள் இணைந்து இத்துறை தொடர்பில் விழிப்புணர்வுகளை தற்போது பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு வழங்க வேண்டும். அவ்வாறு விழிப்புணர்வு வழங்கும் சந்தர்ப்பத்தில் எதிர்காலத்தில் எமது சமூகத்தில் இத்துறையில் தொழில்நுட்பத் தலைவர்களை உருவாக்க முடியும். அதற்கான ஓர் ஆரம்ப மைல்கல்லாகத்தான் இந்தச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது'' - என்றார்.

நாடளாவிய ரீதியில் இத்துறையில் பல பேர் இருந்தாலும் குறிப்பாக, இப்பிராந்தியத்தில் இத்துறையில் மாணவர்களை ஊக்குவித்து அவர்களுக்குத் தேவையான சகல அறிவுரைகளையும் வழிகாட்டல்களையும் வழங்குவதே எமது சங்கத்தின் கடமையும் பணியும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது "Data science Association of Akkaraipattu" என்ற சங்கமும் உருவாக்கப்பட்டதோடு, அதன் அங்குரார்ப்பண நிகழ்வும் இடம்பெற்றது. இப்பிராந்தியத்தில் உள்ள ஓய்வுபெற்ற ஆசிரியர்கள், வைத்தியர்கள், இத்துறை சார்ந்த நிபுணர்கள், பட்டதாரி மாணவர்கள் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.




திருவாதிரை தீர்த்தோற்சவம், திருவெம்பாவை திருப்பள்ளி எழுச்சி மஹோற்சவத்தின் இறுதி நாள் நிகழ்வு நேற்று திங்கட்கிழமை காலை இடம்பெற்றது. காரைதீவு இந்துசமய விருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் காரைதீவிலுள்ள ஆலயங்களின் தேர் பவனியுடன் சிவபெருமான், விநாயகப்பெருமான், முருகப்பெருமான் வள்ளி தெய்வானை அம்பாள் வீதி வழியாக சமுத்திர தீர்த்தோற்சவத்துக்கு செல்வதையும் கலந்து கொண்ட பக்தர்களையும் காணலாம். (காரைதீவு செய்தியாளர்)

# தென்கிழக்கு பல்கலைக்கழக விவசாய வளாகத்தில் ரூ.100 மில்லியன் செலவில் வேலைத்திட்டம்

(திராய்க்கேணி செய்தியாளர்)

தென்கிழக்கு பல்கலைக்கழக மல்வத்தை விவசாய தொழில்நுட்ப வளாகத்தில் ரூ.100 மில்லியன் செலவில் உட்கட்டமைப்பு வசதிகள் அமைக்கும் வேலைத்திட்டம் பல்கலைக்கழக உபவேந்தர் அப்துல் மஜீத் தலைமையில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.



இது குறித்த வேலை முன்னேற்ற நிலைமைகளைக் கண்காணிக்க உபவேந்தர் தலைமையிலான குழுவினர் அண்மையில் (11) மல்வத்தைக்கு நேரடி விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது பல்கலைக்கழக உபவேந்தர் குறித்த வேலைத்திட்டத்தை துரிதகதியில் நிறைவுசெய்யுமாறு ஒப்பந்ததாரர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

குறித்த கள விஜயத்தில் பல்கலைக்கழக தொழில்நுட்பபீட விரிவுரையாளர் கலாநிதி ஏ.என்.எம்.முபாறக், கலாநிதி ஏ.டி.என்.கே.குமா , வேலைத்தள பொறியியலாளர் எம்.எஸ்.எம்.பசீல் ,உள்ளக கணக்காய்வுப்பிரிவு உத்தியோகத்தர்கள் மற்றும் பல்கலைக்கழக வேலைத்தள அத்தியட்சகர்கள் கலந்து கொண்டனர்.மாணவர்களுக்கு பயிற்சி வசதி மற்றும் கற்றல் வசதிகளை ஏற்படுத்தும் வகையில் கட்டுமானப் பணிகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கிளீன் ஸ்ரீ லங்கா திட்டத்தின் கீழ் காத்தான்குடியில் சுற்றிவளைப்பு

## ஐஸ், கேரள கஞ்சா மற்றும் கசிப்புடன் எழுவர் கைது

(காத்தான்குடி மேலதிக செய்தியாளர்)

கிளீன் ஸ்ரீ லங்கா திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸார் ஞாயிற்றுக்கிழமை (12) மாலை நடத்திய திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது பெருமளவான ஐஸ், கேரள கஞ்சா மற்றும் கசிப்பு ஆகிய போதைப்பொருட்களுடன் ஏழு பேர் கைது செய்யப்பட்டதாக காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.



மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லலித் லீலரத்னவின் வழிகாட்டலில் காத்தான்குடி பிரதேச உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.பண்டாரவின் பணிப்புரையின் கீழ் காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர்.எம்.ஐ.பி.ரத்னாநாயக்க தலைமையில் இச்சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

52 பொலிஸ் உத்தியோகத்தர்கள் இந்நடவடிக்கையில் ஈடுபட்டனர். இத்திடீர் தேடுதல் நடவடிக்கைகளின்போது நாவற்குடா, கல்லடி, பாலமுனை, காத்தான்குடி பகுதிகளைச் சேர்ந்த நான்கு பேரிடமிருந்து 04 கிராம் 590 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளும் காத்தான்குடி, நாவற்குடாவைச் சேர்ந்த இருவரிடமிருந்து 40 பக்கட் கேரள கஞ்சாவும் தாளங்குடாவைச் சேர்ந்த நபரிடமிருந்து 21,000 மில்லி லீற்றர் கசிப்பும் கைப்பற்றப்பட்டுள்ளன.

விளையாடும் கிரிக்கெட் பந்தினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கேரள கஞ்சா பக்கட்டுகளையும் பச்சைப்புல்லினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கசிப்பு போத்தல்களையும் பொலிஸார் மீட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதுடன் காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.





*திருவெம்பாவையின் இறுதி நாளான நேற்று திங்கட்கிழமை (13) அதிகாலை வேளையில் கல்லடி சித்திவிநாயகர் ஆலயத்தில் விசேட பூசைகள் நிகழ்த்தப்பட்டு, சுன்னம் இடிக்கும் பாடல் பாடப்பட்டு, சிறுவர், சிறுமிகள் மற்றும் ஆண்களால் சுன்னம் இடிக்கப்பட்டது. இவ்விசேட பூஜைகளை ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ பாலசதீஸ்வரக் குருக்கள் நிகழ்த்தினார். இதனைத் தொடர்ந்து பக்த அடியார்கள் புடைசூழ உமையம்மை சமேத சிவபெருமான் எழுந்தருளி பிரதான வீதியூடாகச் சென்று கல்லடி கடலில் நீராடினார். இதன்போது நூற்றுக்கணக்கான அடியவர்கள் புனித தீர்த்தமாடியமை குறிப்பிடத்தக்கது.*

*(கல்லடி செய்தியாளர்)*

# 'முத்துக்களின் முற்றத்து மல்லிகை' கௌரவிப்பு நிகழ்வு



(பெரியநீலாவணை செய்தியாளர்)

மருதமுனை நாணல் கலை இலக்கிய வட்டம் அதன் ஊடக ஆலோசகர்களாக கடந்த நான்கு ஆண்டுகளுக்கும் மேலாக செயற்பட்டு வரும் ஊடகவியலாளரும் அறிவிப்பாளருமான ஏ.எல்.எம்.ஷினாஸ் மற்றும் ஊடகவியலாளர் றாஸிக் நபாயிஸ் ஆகியோர் அண்மையில் கிழக்கு மாகாண ஊடகத்துறைக்கான இளங்கலைஞர் விருது வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டதை வாழ்த்தி 'முத்துக்களின் முற்றத்து மல்லிகை' எனும் கௌரவிப்பு நிகழ்வை மருதமுனை மண்ணில் நடத்தியது.

மருதமுனை பிரதேசத்தில் ஆற்றலுள்ள பெண்களை ஒன்றிணைத்து கடந்த நான்கு ஆண்டுகளுக்கும் மேலாக செயற்பட்டு வரும் நாணல் கலை இலக்கிய வட்டத்தில் அதன் ஆரம்ப செயற்பாடுகள் தொடக்கம் இறுதி வரை இவர்கள் ஆலோசகர்களாக செயற்பட்டனர்.

நாணல் கலை இலக்கிய வட்டத்தின் வளர்ச்சிக்கும் அது சமூகத்துக்கு ஆற்றிவரும் பங்களிப்புகளை தேசிய ரீதியாக அடையாளப்படுத்துவதற்கும் ஊடகவியலாளர்களான ஏ.எல்.எம்.ஷினாஸ், றாஸிக் நபாயிஸ் ஆகியோர் அளப்பரிய பங்கைச் செய்திருக்கிறார்கள். இவர்கள் நாணல் கலை இலக்கிய வட்டத்தோடு இணைந்து பயணிப்பதில் எமது நாணல் கலை இலக்கிய வட்டம் பெருமை கொள்கிறது. உண்மையில் இவர்கள் தாம் பிறந்த மருதமுனை மண்ணில் மணக்க வேண்டும் என்பதற்காக முதலில் நாம் இவர்களை நமது அமைப்பின் சார்பாகப் பாராட்டிக் கௌரவிப்பதில் இரட்டிப்பு மகிழ்ச்சியடைகிறோம் என்று இங்கு உரையாற்றிய நாணல் கலை இலக்கிய வட்டத்தின் தலைவியும் எழுத்தாளருமான ஆசிரியை பாத்திமா ஷுபா தெரிவித்தார்.

ரேன்ஜ் வியூ நிறுவனத்தின் அனுசரணையோடு நடைபெற்ற இந்நிகழ்வில், ரேன்ஜ் வியூ நிறுவனத்தின் நிதி திட்டமிடல் பணிப்பாளர் தல்ஹா, கவிஞர் விஜிலி, மருதமுனையில் முதலாவது பெண் கவியாழினி மாஜிதா தவ்பிக் உட்பட நாணல் கலை இலக்கிய வட்டத்தின் உறுப்பினர்கள், ஆர்வலர்கள், குடும்ப உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



*கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தால் வசதி குறைந்த குடும்பங்களுக்கு பசு மாடுகள் வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் மூன்றாம் கட்டமாக மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவு, மண்முனை தென்மேற்கு பிரதேச செயலாளர் பிரிவு, மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஆறு பயனாளிகளுக்கு பசுமாடுகள் வழங்கும் நிகழ்வு ஆலய முன்றிலில் சனிக்கிழமை (11) இடம்பெற்றது. இந்நிகழ்வில் ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய பரிபாலன சபையினர் உள்ளிட்ட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலர்கலந்து கொண்டனர். (கல்லடி செய்தியாளர்)*

# பணம், தங்க நகைகளை திருடிய கொள்ளை கோஷ்டி கைது

(சீனக்குடா செய்தியாளர்)

கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 91ஆம் மைக்கல் சந்தியில் அமைந்துள்ள வீடொன்றில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்துடன் சம்பந்தப்பட்ட நால்வரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இக்கொள்ளைச் சம்பவம் கடந்த 04ஆம் திகதி அதிகாலை 1.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. சம்பவ தினம் நான்கு பேர் கொண்ட கொள்ளைக் கோஷ்டி குறித்த வீட்டுக்குள் புகுந்து கணவனை சரமாரியாக தாக்கி மனைவியை கட்டிப்போட்டு விட்டு, அலுமாரியிலிருந்த பணம் மற்றும் 34 பவுண் தங்க நகை என்பவற்றை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.



இந்தக் கொள்ளை கோஷ்டியை தேடி பிடிப்பதற்கு கந்தளாய் பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் திஸ்ஸ விதானகேவின் வழிகாட்டலின் கீழ், பொலிஸ் குழு ஒன்று களமிறக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், குறித்த கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டோர் ஞாயிற்றுக்கிழமை(12) கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் சம்பூர் மற்றும் கம்பளை பிரதேசத்தைச் சேர்ந்த 34, 36, 39, 49 வயதுகளையுடையவர்கள் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய, கம்பளை நகரில் உள்ள தங்கக் கடை ஒன்றில் உருக்கப்பட்ட நிலையில் 16 பவுண் தங்கமும் உருக்குவதற்கு தயார் செய்யப்பட்டிருந்த மோதிரம் உட்பட 19 பவுணும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.குறித்த சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.





*அகில இலங்கை இந்துமாமன்றத்தின் நிதியுதவியைப் பெற்று கல்முனை சிவநெறி அறப்பணி மன்றம் கல்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள நாற்பது பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு தைப்பொங்கலை மகிழ்ச்சியுடன் கொண்டாடும் வகையில் உலருணவுப் பொதிகளை வழங்கியது. இப்பொருட்களை கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரீ.ஜே.அதிசயராஜ் அண்மையில்(10) பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் வைத்து வழங்கிவைத்தார். (எருவில் செய்தியாளர்)*

# சமாதான நீதவான்களுக்கான கருத்தரங்கு

(கல்லடி செய்தியாளர்)



சமாதான நீதவான்களுக்கான கருத்தரங்கும் குறித்த சம்மேளனத்தின் பொதுக்கூட்டமும் சனிக்கிழமை (11) மண்முனைப்பற்று பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அதன் தலைவர் பாவலர் சாந்தி முகைதீன் தலைமையில் இடம்பெற்றன.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக மண்முனைப்பற்று - ஆரையம்பதி பிரதேச செயலாளர் திருமதி தெட்சணாகௌரி தினேஷ் கலந்து சிறப்பித்ததுடன், வளவாளர்களாக பிரபல சட்டத்தரணி எம்.எஸ்.எம்.முகைதீன் சாலி, சம்மேளன ஆலோசகர் வீ.கமலதாஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சமாதான நீதவான்களுக்கான கருத்தரங்கு நிறைவுற்றதும் சம்மேளனத்தின் பொதுக்கூட்டமும் நிர்வாகிகள் தெரிவும் இடம்பெற்றன. சம்மேளனத்தின் புதிய தலைவராக பலத்த போட்டிக்கு மத்தியில் வாக்கெடுப்பின் மூலம் சிரேஷ்ட ஊடகவியலாளரும் அகில இலங்கை சமாதான நீதவானுமான உதயகுமார் உதயகாந்த் தெரிவுசெய்யப்பட்டார். அதனைத் தொடர்ந்து சம்மேளனத்தின் புதிய செயலாளராக துரைராஜா லெட்சுமிகாந்தன் ஏகமனதாக சபையோரினால் தெரிவு செய்யப்பட்டார்.

அத்தோடு, பொருளாளராக ஆயுர்வேத வைத்தியர் சபாரெத்தினம் சுதர்சன், உபதலைவராக எம்.வை.ஆதம், உபசெயலாளராக அருணாசலம் செல்வேந்திரன் ஆகியோரும் நிர்வாக சபை உறுப்பினர்களாக இ.கோமலேஸ்வரி, கே.சதீஸ்குமார், ரீ.தயானந்தம், கே.தவராசா, கே.நடேசன், எம்.எஸ்.அஹமட் லெவ்வை, திருமதி கே.தவப்பிரகாசம், எம்.பகிதரன், எம்.எஸ்.எம்.நசீர், கே.தங்கராசா, ஈ.சீதாராமன், எம்.எம்.அஹமட் சின்னலெவ்வை, என்.நவதாசன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டு புதிய தலைவரின் உரை மற்றும் ஏனைய உறுப்பினர்களின் கருத்துகள் என்பன இடம்பெற்றதைத் தொடர்ந்து செயலாளரின் நன்றியுரையுடன் நிகழ்வுகள் நிறைவுபெற்றன.

# மயோன் சமூக சேவை அமைப்பின் புதிய உறுப்பினர்களுக்கு நியமனக் கடிதம் வழங்கல்









(பாறுக் ஷிஹான்)

மயோன் சமூக சேவை அமைப்பின் 2025ஆம் ஆண்டுக்கான வருடாந்த பொதுக்கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை(10) மாலை கல்முனை மயோன் பிளாஸா வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்றது.

மயோன் சமூக சேவை அமைப்பின் தலைவரும் மயோன் குரூப் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளருமான எம்.றிஸ்லி முஸ்தபா தலைமையில் இடம்பெற்ற இப்பொதுக் கூட்டத்தின் புதிய நிர்வாகக் கட்டமைப்பும் தலைவரினால் அறிவிக்கப்பட்டது.

மௌலவி தாசிம் உம்றி கிராத்துடன் ஆரம்பமான இந்நிகழ்வில் வரவேற்புரை தென்கிழக்கு பல்கலைக்கழக தொழில்நுட்ப உத்தியோகத்தரும் அமைப்பின் ஆலோசகருமான றம்ஸானால் நிழத்தப்பட்டது. நன்றியுரையை அமைப்பின் ஆலோசகர் மாஹிர் நிகழ்த்தினார்.

நிகழ்வின் முக்கிய அம்சமான சத்தியப்பிரமாணத்தை பிரதிச் செயலாளர் முஹம்மது பஸ்மிர் மேற்கொண்டதுடன் முஹம்மட் றொஸான் நிகழ்வை நெறிப்படுத்தியிருந்தார். இந்நிகழ்வில் 2025ஆம் ஆண்டுக்கான செயலாளராக சுஹைல் ஜமால்தீன் தெரிவுசெய்யப்பட்டார். பிரதிச் செயலாளராக முஹம்மட் பஷ்மீர் பொருளாளராக முஹம்மட் நிஃப்ராஸ் ஆகியோர் சபையின் அங்கீகாரத்துடன் அறிவிக்கப்பட்டனர்.

புதிய அங்கத்தவர்களாக இணைந்து கொண்டவர்களுக்கு நியமனக் கடிதம் மற்றும் அமைப்பின் அடையாள அட்டை ஆகியன வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. தொடர்ச்சியாக அங்கத்தவர்களை இணைத்துக்கொள்வதற்கான பொறிமுறையும் உருவாக்கப்பட்டது. சுமார் 05 வருட காலமாக அம்பாறை மாவட்டத்தில் இலட்சக்கணக்கான ரூபாவை செலவு செய்து பல சமூக சேவைகளைச் செய்துவரும் தொண்டு சார் நிறுவனமாக மயோன் சமூக சேவை அமைப்பு திகழ்கின்றமை சுட்டிக்காட்டத்தக்கது.

# மனித மேம்பாட்டு அமைப்பு ஸ்ரீ லங்காவின் மூன்றாம் ஆண்டு நிறைவு விழா



(பாறுக் ஷிஹான்)

மனித மேம்பாட்டு அமைப்பு ஸ்ரீ லங்காவின் 03ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வு தனியார் விடுதியில் சனிக்கிழமை (11) நடைபெற்றது.



மனித மேம்பாட்டு அமைப்பு ஸ்ரீ லங்கா அமைப்பின் பணிப்பாளர் எஸ்.ஏ.முஹம்மட் அஸ்லம் தலைமையில் அம்பாறை மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒருங்கிணைப்பாளர் ஐ.எல்.எம்.இர்பான், அமைப்பின் ஆலோசகர்களான மேஜர் கே.எம்.தமீம், கெப்டன் எம்.டி.நௌஷாத், எம்.அஸீஸ், சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.ஐ.எம்.சம்சுதீன், எம்.எஸ்.அஹமட், சிராஜுன் முனீரா, அமைப்பின் உயர்பீட உறுப்பினர்கள் எனப் பலர் பங்கேற்றனர்.

மேலும் கடந்த மூன்று ஆண்டுகளாக அமைப்போடு இணைந்து பணியாற்றிய அமைப்பின் பிரதேச அமைப்பாளர்கள், துறை சார்ந்த தலைவர்கள், உயர்பீட உறுப்பினர்களுக்கு நியமனப்பத்திரம், அடையாள அட்டை, வழங்கப்பட்டதுடன் உத்தியோகபூர்வ சீருடையும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. மனித மேம்பாட்டு அமைப்பு ஸ்ரீ லங்கா அமைப்பின் செயலாளர் ஐ.பாத்திமா நஸ்லாவின் ஒருங்கிணைப்பில் இந்நிகழ்வு இடம்பெற்றது.


# 15ஆவது தடவையாக ஸ்பானிஷ் கிண்ண சம்பியனான பார்சிலோனா

ஸ்பானிஷ் சுப்பர் கிண்ண இறுதிப் போட்டியில் ரியல் மாட்ரிட் அணியை வீழ்த்திய பார்சிலோனா அணி 15ஆவது தடவையாக சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றி சாதனை படைத்தது.

இலங்கை நேரப்படி நேற்றுமுன்தினம் நள்ளிரவு 12.30 மணிக்கு தொடங்கிய இந்தப் போட்டியில் பார்சிலோனா அணி தொடக்கம் முதலே கோல் அடிக்க முயன்றுகொண்டே இருந்தது. போட்டியின் முதல் பாதி முடிவில் பார்சிலோனா 4-1 என முன்னிலையில் இருந்தது. முதல்பாதிவரை பந்து 67 சதவீதம் பார்சிலோனா அணியிடம் இருந்தது குறிப்பிடத்தக்கது.

96ஆவது நிமிடத்தில் கிளியன் எம்பாபே அடித்த பந்தினை பார்சிலோனா அணியின் கோல் கீப்பர் அற்புதமாக தடுத்தார். இறுதியில் 5-2 என்ற கோல் கணக்கில் பார்சிலோனா அணி வென்றது.

இதன்மூலம் ஸ்பானிஷ் கிண்ணத்தை வரலாற்றில் அதிகமுறை (15 முறை) வென்ற அணியாக பார்சிலோனா காணப்படுகிறது. அடுத்து ரியல் மாட்ரிட் அணி 13 முறை வென்று இரண்டாமிடத்திலுள்ளது.





# சர்வதேச கிரிக்கெட் ஓய்வை மீண்டும் அறிவித்த தமிம்

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் அதிரடி ஆரம்ப துடுப்பாட்ட வீரரும் முன்னாள் தலைவருமான தமிம் இக்பால் (வயது 35) சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

தமிம் இக்பால் பங்களாதேஷ் அணிக்காக 70 டெஸ்ட் போட்டிகளில் ஆடி 5,134 ரன்னும் 243 ஒருநாள் போட்டிகளில் ஆடி 8,357 ரன்னும் 78 ரி20 போட்டிகளில் ஆடி 1,758 ரன்னும் அடித்துள்ளார்.

இவர் கடந்த 2023ஆம் ஆண்டு ஜூலை மாதமே சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார். ஆனால், அப்போதைய பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனாவின் தலையீட்டுக்குப் பிறகு அடுத்த நாளே தனது முடிவை மாற்றி மீண்டும் பங்களாதேஷ் அணிக்காக ஆடினார்.

எதிர்வரும் சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் பங்களாதேஷ் அணியில் தமிம் இக்பால் இடம் பெறுவார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அவர் திடீரென ஓய்வை அறிவித்துள்ளார்.

# மே.இ. தீவுகளுடன் மோதும் பாகிஸ்தான் குழாம் அறிவிப்பு



மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணியுடன் நடைபெறவுள்ள இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடருக்கான பாகிஸ்தான் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஷான் மசூத் தலைமையில் அறிவிக்கப்பட்டுள்ள குறித்த குழாத்தில் காயம் காரணமாக பாகிஸ்தானின் இளம் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் சைம் ஆயூப் அணியில் இடம்பெறவில்லை. அவருக்குப் பதிலாக இமாம் உல் ஹக் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். 15 பேர் கொண்ட பாகிஸ்தான் குழாமில் காசிஃப் அலி அறிமுக வீரராக சேர்க்கப்பட்டுள்ளார்.

மேற்கிந்திய தீவுகள் அணி பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 02 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான முதல் டெஸ்ட் போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை முல்தானில் ஆரம்பமாகிறது.

***பாகிஸ்தான் குழாம் வருமாறு,***

ஷான் மசூத் (தலைவர்), சௌத் ஷகீல் (உப தலைவர்), பாபர் அசாம், முஹமட் ரிஸ்வான், இமாம் உல் ஹக், கம்ரான் குலாம், முஹமட் ஹுரைரா, ரோஹைல் நாசிர், நோமன் அலி, சாஜித் கான், அப்ரார் அஹமட், சல்மான் அஹா அலி, முஹமட் அலி, குர்ரம் ஷாஷத் மற்றும் காசிஃப் அலி.

# சம்பியன்ஸ் கிண்ணத்தின் ஆரம்பப் போட்டிகளை தவறவிடும் பும்ரா

பாகிஸ்தான் மற்றும் டுபாயில் அடுத்த மாதம் ஆரம்பமாகும் ஒன்பதாவது ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ணத் தொடரின் லீக் ஆட்டங்களில் இந்திய முன்னணி வேகப்பந்து வீச்சாளரான ஜஸ்ப்ரீத் பும்ரா விளையாட மாட்டார் என தகவல் வெளியாகியுள்ளது.

அண்மையில் நிறைவடைந்த அவுஸ்திரேலிய அணியுடனான பார்டர் - கவாஸ்கர் டெஸ்ட் தொடரின்போது பும்ராவுக்கு முதுகில் வீக்கம் ஏற்பட்டது. இந்த வீக்கம் குணமாக மார்ச் முதல் வாரம் ஆகும் என கூறப்படுகிறது. அதனால் அவர் லீக் ஆட்டங்களில் ஆட மாட்டார் என கூறப்படுகிறது.

அதேசமயம், சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கான இந்திய அணியில் பும்ரா இடம் பிடிப்பார் எனவும் காயம் விரைவில் குணமாகிவிட்டால் நொக் அவுட் ஆட்டங்களில் ஆடுவார் எனவும் கூறப்படுகிறது. இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு இன்னும் சில தினங்களில் வெளியாகும் என தெரிகிறது.



# மார்ச் 21இல் ஆரம்பமாகும் ஐ.பி.எல் - 2025



2025ஆம் ஆண்டுக்காக இந்தியன் ப்ரீமியர் லீக் தொடர் எதிர்வரும் மார்ச் மாதம் 21ஆம் திகதி ஆரம்பமாகும் எனவும் ஆரம்பப் போட்டி மற்றும் இறுதிப்போட்டி என்பன கொல்கத்தாவின் ஈடன் கார்டன்ஸ் மைதானத்தில் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக ஐ.பி.எல். 2025 தொடருக்கான வீரர்களின் மெகா ஏலம் சவூதி அரேபியாவில் கடந்த நவம்பர் மாதம் நடைபெற்றது. இந்த ஏலத்தில் 557 வீரர்கள் பங்கேற்றனர். இதில் வெளிநாட்டைச் சேர்ந்த 62பேர் உட்பட மொத்தம் 182 வீரர்கள் ரூ. 639 கோடியே 15 இலட்சத்துக்கு ஏலத்தில் எடுக்கப்பட்டனர்.

இந்நிலையில், மும்பையில் நடைபெற்ற பி.சி.சி.ஐ. நிர்வாகக்குழு கூட்டத்துக்கு பின் செய்தியாளர்களை சந்தித்த ராஜீவ் சுக்லா இந்த அறிவிப்பை வெளியிட்டார். மேலும், ஐ.பி.எல். 2025 தொடரின் இறுதிப்போட்டி மே மாதம் 25 ஆம் திகதி நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விளையாட்டுத் துளிகள்

★ இந்திய தடகள சம்மேளனத்தின் ஆண்டு பொதுக்குழு கூட்டம் சண்டிகாரில் நடைபெற்றது. இதில் 2025-2029ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் தேர்தல் நடந்தது. 2002ஆம் ஆண்டு பூசனில் நடந்த ஆசிய விளையாட்டு போட்டியில் குண்டு எறிதலில் தங்கப்பதக்கம் வென்றவரான பஞ்சாப்பை சேர்ந்த 51 வயது பகதூர் சிங் சாகூ புதிய தலைவராக ஒருமனதாக தெரிவுசெய்யப்பட்டார். அந்தப் பதவிக்கு வேட்பு மனு தாக்கல் செய்திருந்த முன்னாள் நீளம் தாண்டுதல் வீராங்கனை அஞ்சு பாபி ஜார்ஜ் திடீரென ஒதுங்கியதால் பகதூர் சிங் போட்டியின்றி தெரிவானார்.

★ 9ஆவது ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கான அணிகளை ஜனவரி 12ஆம் திகதிக்குள் அறிவிக்க வேண்டும் என 08 நாடுகளின் கிரிக்கெட் சபைகளுக்கும் ஐ.சி.சி. அறிவிப்பு வெளியிட்டிருந்தது. எனினும், இந்திய அணியின் பட்டியல் வெளியிடப்படவில்லை. இந்நிலையில், எதிர்வரும் 18 அல்லது 19ஆம் திகதிக்குள் இந்திய அணியின் குழாம் அறிவிக்கப்படும் என்று பி.சி.சி.ஐ. உப தலைவர் ராஜிவ் சுக்லா தெரிவித்துள்ளார்.

★ ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கான ஹஷ்மத்துல்லா ஷாஹிடி தலைமையில் அறிவிக்கப்பட்டுள்ள 15 பேரடங்கிய ஆப்கானிஸ்தான் அணியில் முன்னணி வீரரான இப்ராஹிம் சத்ரான் நீண்ட நாட்கள் கழித்து இடம்பிடித்துள்ளார். மேலும் நட்சத்திர வீரர்களான முஹமட் நபி, ரஷீட் கான், குல்பதின் நைப் ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர். ஆப்கானிஸ்தான் அணி வரலாற்றில் முதல் முறையாக சம்பியன்ஸ் கிண்ணத்தில் களமிறங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

★ அயர்லாந்து மகளிர் அணியுடனான 03 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் 2ஆவது போட்டியிலும் வெற்றியீட்டிய இந்திய மகளிர் அணி இன்னும் ஒரு போட்டி எஞ்சியிருக்கும் நிலையில் தொடரை வசப்படுத்தியுள்ளது. 3ஆவது ஒருநாள் போட்டி நாளை புதன்கிழமை நடைபெறுகிறது.

# பஞ்சாப் அணியின் தலைமைத்துவம் ஐயருக்கு

2025ஆம் ஆண்டுக்கான ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் பஞ்சாப் கிங்ஸ் அணியின் தலைவராக ஸ்ரேயாஸ் ஐயர் நியமிக்கப்பட்டுள்ளார்.

18ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் மார்ச் மாதம் 23ஆம் திகதி ஆரம்பமாகிறது. 10 அணிகள் பங்கேற்கும் ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் பஞ்சாப் கிங்ஸ் அணியின் தலைவர் யார் என்ற அறிவிப்பை அந்த அணியின் நிர்வாகம் அறிவித்துள்ளது.

அதன்படி, பஞ்சாப் கிங்ஸ் அணியின் தலைவராக ஸ்ரேயாஸ் ஐயர் நியமிக்கப்பட்டுள்ளார். முன்னதாக, கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற ஐ.பி.எல். வீரர்கள் ஏலத்தில் ஸ்ரேயஸ் ஐயரை 26.75 கோடி ரூபாவுக்கு பஞ்சாப் அணி வாங்கியது.

ஐ.பி.எல். வரலாற்றில் மிகவும் அதிக தொகைக்கு ஏலத்தில் வாங்கப்பட்ட 2ஆவது வீரர் என்ற பெருமையை ஸ்ரேயாஸ் ஐயர் பெற்றார். தற்போது அவர் பஞ்சாப் அணியின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.






# பாகிஸ்தான் – இலங்கை நட்புறவு கிண்ணம் கொழும்பில் ஆரம்பமானது!

***(நூருல் ஹுதா உமர்)***

ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பினால் 2014ஆம் ஆண்டு முதல் ஏற்பாடு செய்யப்பட்டு தொடர்ச்சியாக 10ஆவது வருடமாகவும் நடைபெறவுள்ள 40 வயதுக்கு மேற்பட்டவர்களின் மூத்த உதைபந்தாட்டப் போட்டியானது 10ஆவது ஆண்டை முன்னிட்டு பாகிஸ்தான் - இலங்கை நட்புறவு கிண்ணமாக அறிவிக்கப் பட்டுள்ளது.

இப்போட்டியில் 24 முன்னணி அணிகள் பங்குபற்றவுள்ளதோடு, இலங்கை தேசிய அணியை பிரதிநிதித் துவப்படுத்திய முன்னாள் வீரர்களும் அந்த விளையாட்டுக் கழகங்களை பிரதி நிதித்துவப்படுத்தி பங்குபற்றியுள்ளனர். கொழும்பு -13, கொட்டாஞ்சேனை ரத்தினம் மைதானத்தில் நடைபெறவுள்ள இந்தப் போட்டியின் ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் (12) இடம்பெற்றது. பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் இடையிலான வலுவான நட்புறவை ஆதரிப்பதே இந்தப் போட்டியின் நோக்கம் என்றும் இந்தப் போட்டியை காண விளையாட்டு ரசிகர்களை ஒன்றிணைந்து தங்கள் ஆதரவை தெரிவிக்குமாறும் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இந்த ஆரம்ப நிகழ்வில் ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் சிரேஷ்ட பிரதி தலைவர் மௌலவி ஐ.எம்.எம். மிப்லால், கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினர்களான ஐ.ஏ. கலீலுர்ரஹ்மான், தலைமைத்துவ சபை உறுப்பினர் எஸ்.எம். முஸம்மில், கூட்டமைப்பின் பிரசார செயலாளர் எம்.பி.காதர் உட்பட கழகங்களின் பிரதானிகள், முக்கியஸ்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# ஸ்டாலினுடன் செல்பி எடுக்க முண்டியடித்த எம்.பிக்கள் மீனவர்களது பிரச்சினையை பேசத் தயங்கியது ஏன்?

## கேள்வி எழுப்பும் யாழ். மீனவர்கள்!

(பு.கஜிந்தன்)

“இந்தியா, தமிழ்நாட்டில் நடைபெற்ற நிகழ்வொன்றுக்குச் சென்ற பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், இரா.சாணக்கியன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான ஆ.சுமந்திரன் ஆகியோர் நேற்று முன்தினம் (12) தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்தனர். இதன்போது இலங்கை மீனவர்களது பிரச்சினைகள் குறித்து பேசாமல் முதலமைச்சருடன் சிரித்துக்கொண்டு வெறுமனே செல்பி எடுத்தமை வருத்தமளிக்கின்றது” – என யாழ்ப்பாணம் மாவட்ட மீனவ சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் உப தலைவர் ரட்ணகுமார் தெரிவித்துள்ளார்.



யாழ்ப்பாணத்திலுள்ள சம்மேளனத்தின் அலுவலகத்தில் நேற்று (13) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை மீனவர்களது பிரச்சினைகள் தொடர்ந்தும் தொடர்கதையாகவே உள்ளது. இலங்கை மீனவர்களின் வலைகள் மற்றும் தொழில் முதலியன இந்திய இழுவைப் படகுகளால் அழிக்கப்படுகின்றன. இது இவ்வாறிருக்கையில் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், இந்திய மீனவர்கள் வாழ்வாதாரத்துக்காக மீன்பிடியில் ஈடுபடும்போது இலங்கை கடற்படை கைதுசெய்ததாகக் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறான கருத்து பிழையானது என்றுகூட அவர்கள் முதலமைச்சரிடம் சுட்டிக்காட்டவில்லை.

கடந்த வருடம் நடுப்பகுதியில் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும் சீறுவாணம் விட்டதுபோல, இந்திய இழுவைமடி தொழிலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, முல்லைத்தீவு பகுதியிலிருந்து யாழ்ப்பாணம் - பருத்தித்துறை நோக்கி ஒரு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

மக்களுக்காக இந்தப் போராட்டத்தை செய்கின்றார்கள். இது வரவேற்கத்தக்க விடயம் என்று அப்போது நாங்களும் சந்தோஷப்பட்டோம். ஆனால் நேற்று முதலமைச்சருடன் அவர்கள் சிரித்துக்கொண்டு செல்பி எடுத்ததைப் பார்க்கும்போது, இலங்கை மீனவர்களது விடயம் நினைவில் கூட இல்லை என்பது போலதான் எமக்குத் தெரிகிறது.

இந்த நிகழ்வுக்கு கடற்றொழில் அமைச்சரின் தலைமையில்தான் இந்த குழு சென்றதாக அறியமுடிகிறது. அதிலும் சிலருக்கு அழைப்பு விடுத்தும் சிலருக்கு அழைப்பு விடுக்காமலும் அந்த நிகழ்வுக்குச் சென்றிருந்தனர். அங்கு சென்று கடற்றொழில் அமைச்சர் கூட மீனவர் பிரச்சினை குறித்து பேசியதாக ஊடகங்களில் செய்திகள் எவையும் வெளிவரவில்லை.

எங்களது மக்களின் வளங்களை அழித்தவர்கள்தான் முதலமைச்சர் ஸ்டாலினின் மக்கள். அவருடன் செல்பி எடுக்கத் துணிந்த நீங்கள், அவரது காதிலாவது ஒரு தடவை சொல்லியிருக்கலாமே இலங்கை மீனவர்களது பிரச்சினையை.

சிலவேளை இது குறித்து முதலமைச்சர் ஸ்டாலினிடம் சொல்வதற்கு உங்களுக்குப் பயமிருக்கலாம். ஏனெனில், உங்களில் சிலருக்கு இந்தியாவில் வீடுகள், நிலங்கள் இருக்கலாம். ஆகையால், பிறகு அங்கு போவது உங்களுக்குப் பயமாக அல்லது பிரச்சினையாக இருக்கும். ஆனால், வெளியே வந்து அங்குள்ள ஊடகங்களுக்கு என்றாலும் எமது மீனவர்களது வளங்கள் அழிப்பது குறித்து சொல்லுங்கள். எங்களது மீனவர்களது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதை சொல்லுங்கள். அதை சொல்லிவிட்டு வாருங்கள் - என்றார்.

# பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு பொங்கல் பொதிகள் வழங்கிவைப்பு







(பு.கஜிந்தன்)

தொண்டைமானாறு பகுதியைச் சேர்ந்த 50 பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு நேற்று முன்தினம் (12) பொங்கல் பொதிகள் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் பொங்கல் பொதிகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதுவர் சாய்முரளி, பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் பிரதேச செயலர் சத்தியசீலன், கிராம சேவகர் பைகுந்தன் மற்றும் பயனாளிகள் கலந்துகொண்டனர்.

# முல்லைத்தீவு வலயத்தில் வெளிமாவட்டம் செல்லாத பல நூறு ஆசிரியர்கள்

(பு.கஜிந்தன்)

முல்லைத்தீவு கல்வி வலயத்தில் 20 கி.மீ. தூரத்துக்குள் மாறி மாறி தொடர்ச்சியாக சேவையாற்றி வரும் சுமார் 500 ஆசிரியர்களால் யாழ்ப்பாணம் மாவட்டத்திலிருந்து அங்கு சேவைக்குச் செல்லும் ஆசிரியர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டுள்ளார்கள்.

குறித்த விடயம் தொடர்பில் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணம் மாவட்டத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்கு பல வருடங்களாக இடமாற்றமின்றி சென்றுவரும் ஆசிரியர்கள் தொடர்ச்சியாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்ட நிலையில் குறித்த விபரம் வெளியாகியுள்ளது.

முல்லைத்தீவு கல்வி வலயத்தில் மட்டும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலம் வழங்கப்பட்ட திகதியில் 66 பாடசாலைகளில் 512 ஆசிரியர்கள் முல்லைத்தீவு வலயத்தின் 20 கி.மீக்கு உள்ளேயே மாறி மாறி சேவையில் உள்ளமை வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

இதன் காரணமாக யாழ்ப்பாணத்திலிருந்து வெளி மாவட்ட சேவைக்கு முல்லைத்தீவு செல்லும் ஆசிரியர்கள் சுமார் 150 கி.மீ. வரை பிரயாணம் செய்யவேண்டிய துர்ப்பாக்கிய நிலையை எதிர்நோக்கியுள்ளனர்.

உதாரணமாக, விசுவமடு, புதுக்குடியிருப்பு வரை யாழ்ப்பாணத்திலிருந்து வரும் ஆசிரியர்களை பணிக்கு அமர்த்தி அப்பிரதேசங்களைச் சேர்ந்த ஆசிரியர்களை முல்லைத்தீவு நகருக்கப்பாலுள்ள பாடசாலைகளுக்கு பரம்பல் செய்வதன் மூலம் ஆசிரியர்களின் பிரயாணச் சுமையைக் குறைக்க முடியும்.

இருப்பினும், குறித்த பிரதேச ஆசிரியர்களின் அரசியல் மற்றும் அதிகார செல்வாக்கு காரணமாக 20 கி.மீ. உட்பட்ட பாடசாலைகளில் பணிக்கு அனுமதித்து யாழிலிருந்து முல்லைத்தீவின் பிரதேச பெயர்கள் கூட அறியாத ஆசிரியர்கள் தூரப் பிரதேசங்களில் பணிக்கமர்த்தப்பட்டனர்.

குறித்த விடயம் தொடர்பில் வட மாகாண கல்வி அமைச்சு கவனம் செலுத்தி வெளிமாவட்டம் செல்லாது ஒரே மாவட்டத்தில் பல வருடங்களாக தங்கியிருப்போரை இடமாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# ரோஹிங்யா முஸ்லிம்கள் விவகாரம்: வடக்கு – கிழக்கு இணைப்பாளரை விசாரணைக்கு வருமாறு அழைப்பு!

(பு.கஜிந்தன்)

வடக்கு - கிழக்கு சிவில் ஒருங்கிணைப்புக் குழுவின் இணை இணைப்பாளர் ஜோன்சன் பிரிராடோவை கொழும்பிலுள்ள குற்றப்புலனாய்வுத் திணைக்களத் தலைமை அலுவலகத்துக்கு விசாரணைக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் தெரியவருவதாவது, அண்மையில் முல்லைத்தீவு கடலில் ரோஹிங்யா முஸ்லிம்களை ஏற்றிய படகு தமக்கு அடைக்கலம் தருமாறு வருகை தந்தது. குறித்த படகில் வந்த சுமார் நூற்றுக்கு அதிகமானவர்கள் விமானப்படையின் கண்காணிப்பில் தடுத்து வைக்கப்பட்டு அவர்கள் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்றன.

அவர்களை நாடு கடத்துவது தொடர்பில் பரிசீலிக்கப்பட்டு வந்த நிலையில் நாடு கடத்த வேண்டாமென முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு முன்னால் வடக்கு - கிழக்கு சிவில் ஒருங்கிணைப்புக் குழு கவனயீர்ப்புப் போராட்டமொன்றை முன்னெடுத்தது.



போராட்டத்தில் பங்குபற்றிய வடக்கு - கிழக்கு சிவில் ஒருங்கிணைப்புக் குழுவின் இணைப்பாளர் ஜோன்சன் பிரிராடோ, மியன்மாரில் பாதுகாப்பு இல்லை. தமக்கு பாதுகாப்புத் தருமாறு அடைக்கலம் கோரிய ரோஹிங்யா முஸ்லிம்களை இலங்கை அரசாங்கம் மியன்மாரிடம் ஒப்படைக்கக் கூடாதென வலியுறுத்தியிருந்தார்.

அவர்களை இலங்கையிலிருந்து பாதுகாப்பாக இன்னொரு நாட்டிடம் சர்வதேச மனித உரிமைகள் நிறுவனங்களின் கண்காணிப்பில் வைத்து பாதுகாக்க வேண்டுமென வலியுறுத்தி கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்நிலையில் குறித்த போராட்டம் தொடர்பில் வாக்கு மூலம் பெறுவதற்காக கொழும்பிலுள்ள குற்றப் புலனாய்வுத் தலைமை அலுவலகத்துக்கு வருமாறு அழைப்பு கட்டளை அனுப்பப்பட்டுள்ளது.

# போதை மாத்திரைகளுடன் இருவர் கைது!

(பு.கஜிந்தன்)

சாவகச்சேரி நகரப் பகுதியில் 200 போதை மாத்திரைகளுடன் இளைஞர்கள் இருவர் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் வழிகாட்டலின் கீழ், உப பொலிஸ் பரிசோதகர் மயூரன் தலைமையிலான குழுவினரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

போதை மாத்திரைகளை விற்பனை செய்வதற்காக கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் - சாவகச்சேரிக்கு வருகை தந்த 20 மற்றும் 24 வயதுடைய இருவர் அங்கு நின்றுகொண்டிருந்தபோது சாவகச்சேரி பொலிஸார், அவர்கள் இருவரையும் சோதனையிட்டபோது அவர்களிடம் போதை மாத்திரைகள் இருப்பது தெரியவந்தது. இந்நிலையில் அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளின் பின்னர் அவர்களை சாவகச்சேரி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வவுனியாவில் ஔவையாரின் நினைவு தினம் அனுஷ்டிப்பு





(வவுனியா நிருபர்)

ஔவையாரின் நினைவு தின நிகழ்வு வவுனியா, சின்னப்புதுக்குளம், மாமடுவ சந்தியிலுள்ள ஔவையாரின் சிலையடியில் நேற்று (13) இடம்பெற்றது.

இதன்போது ஔவையாரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலரஞ்சலியும் செலுத்தப்பட்டிருந்ததுடன், தமிழ்மணி அகளங்கன் மற்றும் மாணவர்களின் நினைவுப் பேருரைகளும் இடம்பெற்றன.



வவுனியா நகர சபையின் ஏற்பாட்டில் தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார் கண்ணன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் உள்ளூராட்சி மன்ற முன்னாள் உறுப்பினர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# Faith learning center இலவச கல்வி நிலையம் திறப்பு!

(பு.கஜிந்தன்)

Faith learning center என்ற இலவச கல்வி நிலையமானது கடந்த சனிக்கிழமை (11) உத்தியோகபூர்வமாக அராலி மேற்கு, வட்டுக்கோட்டையில் திறந்து வைக்கப்பட்டது.

தமிழர்களின் பாரம்பரிய கோலாட்டத்துடன் விருந்தினர்கள் அழைத்துவரப்பட்டு, கல்வி நிலையத்தின் நினைவுப் படிகம் திரை நீக்கம் செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மங்கள விளக்கேற்றி நிகழ்வு ஆரம்பமானது. பின்னர் வரவேற்புரை, தலைமையுரை, விருந்தினர்களின் உரைகள் மற்றும் மாணவர்களது கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.






இந்தக் கல்வி நிலையத்துக்கு நிதியை வழங்கிவரும் திருமதி வசந்தா ராஜேஸ்வரன் நிகழ்வுக்குத் தலைமை தாங்கியதுடன், பிரதம அதிதியாக வைத்தியர் வின்ஸ்டன் ஜெசுரன் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார்.

கல்வி நிலையத்தின் பொறுப்பாசிரியை திருமதி ரோஜா, தென்னிந்திய திருச்சபையின் பேராயர் பத்மதயாளன், பாடசாலையின் அதிபர்கள், ஆசிரியர்கள், சமூகமட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



# ஈழ நிசான் அறக்கட்டளையால் கற்றல் உபகரணங்கள் வழங்கல்!

(பு.கஜிந்தன்)

ஈழ நிசான் அறக்கட்டளையால் 725 மாணவர்களுக்கு 07 இலட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் நேற்று முன்தினம் (12) வழங்கப்பட்டன.

புங்குடுதீவு பகுதியிலுள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு புங்குடுதீவு அம்பலவாணர் கலையரங்கில் வைத்து கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

மேற்கத்தேய இசை வாத்தியங்கள் முழங்க விருந்தினர்கள் மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர். அதனைத் தொடர்ந்து மங்கள விளக்கேற்றி நிகழ்வு ஆரம்பமானது. தொடர்ந்து அகவணக்கம், வரவேற்புரை, தலைமையுரை விருந்தினர்கள் உரை என்பன இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

ஈழ நிசான் அறக்கட்டளையின் செயலாளர் பு.கிரிதரன் தலைமை தாங்கிய இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரனும் சிறப்பு விருந்தினராக தீவக வலயக்கல்விப் பணிப்பாளரும் கௌரவ விருந்தினராக ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தின் கீழ் உள்ள தீவக வலயப் பொலிஸ் பொறுப்பதிகாரி சேந்தனும் கலந்து சிறப்பித்ததுடன், மாணவர்கள், பெற்றோர், சமூகமட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.









# மகரஜோதி தரிசனம் இன்று



சபரிமலையில் இன்று (14) மாலை மகரஜோதி தரிசனம் இடம்பெறவுள்ளது. பொன்னம்பல மேட்டில் தெரியும் மகரஜோதியை தரிசிக்க உலகெங்கிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான ஐயப்ப பக்தர்கள் சபரிமலையில் திரண்டுள்ளனர்.இந்த நாளில் ஐயப்பன் விக்கிரகத்தில் அணிவிக்கும் ஆபரணங்கள் பந்தளம் அரண்மனையிலிருந்து கொண்டுவரப்படுகிறது.

அந்தவகையில் பந்தளம் வலியக்கோயிக்கல் சாஸ்தா கோவிலில் பக்தர்களின் தரிசனத்துக்காக வைக்கப்பட்ட திருவாபரணங்கள் பக்தர்களின் தரிசனத்துக்குப் பின்னர் பேழைகளில் அடைக்கப்பட்டு கோயிலில் உச்ச பூஜை இடம்பெற்ற நிலையில் பந்தளத்திலிருந்து திருவாபரணம் புறப்பட்டது.

கோயிலிலிருந்து திருவாபரண பேழைகள் வெளியே வந்தபோது, ஆகாயத்தில் கருடன் வட்டமிட்டது. பக்தர்களின் சரண கோஷம் விண்ணைத் தொடுமளவு எழுந்தது. தொடர்ந்து, திருவாபரண பவனி புறப்பட்டது.

# "உலகத் தமிழர் அனைவருக்கும் அன்பான தைத் திருநாள் நல்வாழ்த்துகள்"

## தமிழக முதலமைச்சர் ஸ்டாலின்



உலக வாழ் தமிழர்கள் இன்று (14) தைத்திருநாளைக் கொண்டாடிக்கொண்டிருக்கும் இவ்வேளையில், தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் விடுத்துள்ள பொங்கல் வாழ்த்துச் செய்தியில்,

''முத்தமிழ், முச்சங்கம், முக்கனி, மூவேந்தர், முக்கொடி கொண்ட தமிழரின் தனிப்பெரும் பண்பாட்டு விழாவான பொங்கல் திருநாள் மூன்று நாட்களுக்குக் கொண்டாடப்படுகிறது. நானிலம் போற்றும் இந்த நன்னாளை எழுச்சியோடு இந்தப் புத்தாண்டில் கொண்டாட எதிர்நோக்கியுள்ள உலகத் தமிழர் அனைவருக்கும் எனது அன்பான தைத் திருநாள் நல்வாழ்த்துகள்'' எனத் தெரிவித்துள்ளார்.




## கட்டுக்கடங்காது பற்றியெரியும் காட்டுத் தீ:

# வெந்து தணிந்தது லொஸ்ஏஞ்சல்ஸ்

### 24 பேர் உயிரிழப்பு; 12 பேர் மாயம்

### உதவிக்கரம் நீட்டும் உலக நாடுகள்



அமெரிக்காவின் லொஸ்ஏஞ்சல்ஸ் பகுதியில் இன்று (14) 07ஆவது நாளாகவும் கட்டுக்கடங்காத காட்டுத் தீ பற்றியெரிந்துவரும் நிலையில், தீயில் சிக்கி 24 பேர் உயிரிழந்துள்ளதுடன், 16 பேர் காணாமல்போயுள்ளனர். இதுவரை 1,50,000இற்கும் மேற்பட்டோர் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளனர். 1,800 கட்டடங்கள் முழுமையாகவும் 10,000இற்கும் மேற்பட்ட கட்டடங்கள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

தண்ணீர்ப் பற்றாக்குறை, தீயணைப்பு வீரர்கள் பற்றாக்குறை, காற்றின் வேகம் அதிகரிப்பு உள்ளிட்ட காரணங்களால் தீயை அணைக்கும் பணிகளில் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

**ஏழாவது நாளாகவும் பற்றியெரியும் தீ**

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தின் லொஸ்ஏஞ்சல்ஸ் நகரில் கடந்த 07ஆம் திகதி காட்டுத் தீ ஏற்பட்டது. காட்டுத் தீயால் பலிசெடெஸ் (Palisades), ஈட்டன் (Eaton), அல்டாடெனா ஆகிய பகுதிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் நாட்களில் நிலைமை மோசமடையுமெனவும் மணிக்கு 110 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசுமெனவும் அந்நாட்டு வானிலை ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர்.

காற்று அதிவேகமாக இருப்பதால் தீப்பிழம்புகள் விரைவில் பரவிவருகின்றன. இதனால் தீயை அணைக்கும் பணி கடினமாக இருப்பதாகத் தீயணைப்பு வீரர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தக் காட்டுத் தீ மளமளவென 50,000 ஏக்கர் அளவுக்குப் பரவியுள்ளது. இதில் சுமார் 40,000 ஏக்கர் பரப்பளவு முழுமையாக தீயில் எரிந்து நாசமாகியுள்ளது. சுமார் 7,500 தீயணைப்பு வீரர்கள் தீயணைப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். அத்துடன், காட்டுத் தீயைக் கட்டுக்குள் கொண்டுவரும் பணியில் ஏராளமான ஹெலிகொப்டர்கள், விமானங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

எனினும், லொஸ்ஏஞ்சல்ஸில் ஏற்பட்டுள்ள தண்ணீர்ப் பற்றாக்குறையால் தீயைக் கட்டுப்படுத்த முடியாமல் தீயணைப்பு வீரர்கள் திணறி வருகின்றனர்.

இதுவரை 30 சதவீத பகுதியில் மட்டுமே காட்டுத் தீ கட்டுப்படுத்தப்பட்டது. குறித்த பகுதியில் பலத்த காற்று வீசிவருவதால் காட்டுத் தீ பற்றியெரிந்து வருகிறது. பாதிக்கப்பட்டவர்களின் உடல்களைத் தேடும் பணிகள் முழுமூச்சில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மோப்ப நாய்களின் உதவியுடன் உயிரிழந்தோரின் உடல்களைத் தேடும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

காட்டுத் தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்ட பகுதிகளில், வீடு திரும்பிய குடியிருப்பு வாசிகள், தங்களது குடியிருப்புகள் கருகி சாம்பலான நிலையில் இருப்பதைக் கண்டு கண்ணீர் வடித்துள்ளனர்.

**கைவிடப்பட்ட வீடுகளில் திருடர்கள் கைவரிசை**

கைவிடப்பட்ட வீடுகளில் புகுந்து அங்கிருக்கும் விலையுயர்ந்த பொருட்களைக் கொள்ளையடித்ததாக 20இற்கும் மேற்பட்டவர்களைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் தீயணைப்பு வீரரைப்போன்று உடையணிந்து திருட்டில் ஈடுபட்ட திருடரொருவரும் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்தோடு தீ கட்டுக்குள் வந்த பகுதியிலுள்ள குடியிருப்புகளில் மீண்டும் தீ வைக்க முயன்ற சில விஷமிகளும் கைதுசெய்யப்பட்டுள்ளதாக கலிபோர்னியா மாகாணப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெளியேற்றப்பட்ட பகுதிகளில் இரவு நேர ஊரடங்கு உத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது. கலிபோர்னியாஆளுநர் கவின் நியூசம், ''நகரம் மீண்டும் கட்டப்படும்'' என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

காட்டுத் தீ காரணமாக, லொஸ் ஏஞ்சல்ஸிலுள்ள பாடசாலைகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. பொழுதுபோக்கு, விளையாட்டு மற்றும் சமுதாய நிகழ்ச்சிகள் இரத்துசெய்யப்பட்டுள்ளன. லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் காட்டுத் தீ காரணமாக கடும்புகைமூட்டமாக பல பகுதிகள் காணப்படுகின்றன. இதனால், மக்கள் வீட்டுக்குள்ளேயே இருக்க வேண்டுமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் லொஸ்ஏஞ்சல்ஸை ஒட்டியுள்ள ஆண்டிலொப் பள்ளத்தாக்குக்கும் சாண்டா கிளாரிட்டாவுக்குமிடையேயுள்ள வனப்பகுதியில் கடந்த 7ஆம் திகதி பற்றி எரிய ஆரம்பித்த காட்டுத் தீ, இன்று (14) 07ஆவது நாளாகவும் பற்றியெரிந்து வருகிறது. இத்தீ கலிபோர்னியா மாகாணத்தின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகர் வரை சுமார் 50 ஆயிரம் ஏக்கர் அளவுக்கு மளமளவெனப் பரவியுள்ளது.

காட்டுத் தீ காரணமாக ஒரு இலட்சத்து 53 ஆயிரம் பேர் முக்கிய உடமைகளுடன் தங்களது வீட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.



காட்டுத் தீ எப்படி பற்றியது என்பதற்கான மூலக் காரணம் குறித்து அறியப்படவில்லை என்றும், வறண்ட வானிலை காரணமாகவும் காற்று வேகமாக வீசியதுமே தீ மளமளவென பரவக் காரணம் எனவும் அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கலிபோர்னியா மாகாணத்தின் கடற்கரை பகுதிகளையும் காட்டுத் தீ விட்டுவைக்கவில்லை. லொஸ்ஏஞ்சல்ஸ் கடற்கரையை ஒட்டியுள்ள மலிபு என்ற பகுதியில் வசித்துவந்த ஹொலிவுட் நட்சத்திரங்கள் பலர் தங்களது வீடுகளை விட்டுவிட்டு இடம்பெயந்தனர்.

ஒலிம்பிக் போட்டிகளில் தான் வென்ற 10 பதக்கங்களையும் காட்டுத் தீக்கு பறிகொடுத்ததாக அமெரிக்க முன்னாள் நீச்சல் வீரர் கேரி ஹெல் வேதனை தெரிவித்துள்ளார்.

காட்டுத் தீயைக் கட்டுப்படுத்த முடியாமல் போனது குறித்து விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. தீப்பரவலை கட்டுப்படுத்த உதவும் நீர் பீய்ச்சி அடிக்கும் உபகரணங்கள் உரிய முறையில் செயற்படாதது குறித்தும், வழக்கமாக காட்டுத் தீயை அணைக்க நீர் எடுக்கப்படும் சாண்டா நீஸ் நீர்த்தேக்கத்தில் உரிய நீர் வரத்து இல்லாதது குறித்தும் உயர்மட்ட விசாரணைக்கு கலிபோர்னியா மாகாண மேயர் உத்தரவிட்டுள்ளார். உயிரிழப்பைத் தவிர்க்க மின்சாரம் துண்டிக்கப்பட்டதால், மின்மோட்டார்களைப் பயன்படுத்தி நீர் இறைத்து தீயணைப்பதில் சிக்கல் ஏற்பட்டதாகவும் அப்பகுதி குன்றுகள் நிறைந்த பகுதி என்பதால் நிலத்தடியில் குழாய் மூலம் நீர் ஏற்ற முடியவில்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது.



**காட்டுத் தீக்குக் காரணம் என்ன?**

ஒரு வாரமாகியும் காட்டுத் தீயைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இதுகுறித்து லொஸ்ஏஞ்சல்ஸ் அதிகாரிகளின் வட்டாரங்கள் தெரிவிக்கையில்,

லொஸ்ஏஞ்சல்ஸ் நகரம் மலை சார்ந்த பகுதியாகும். இந்த மலைப் பகுதிகளில் வீடுகள் இல்லாத நாடோடிகள் பலர் வசிக்கின்றனர். தற்போது குளிர் காலம் என்பதால் அவர்களில் யாராவது வெப்பத்துக்காக தீ மூட்டியிருக்கலாம். அந்தத் தீ காட்டுத் தீயாகப் பரவியிருக்கலாமென்று சந்தேகிக்கிறோம்.

லொஸ்ஏஞ்சல்ஸ் வனப் பகுதியில் புதைவடமாகவும் உயர் கோபுரங்கள் மூலமும் உயர்அழுத்த மின்சாரக் கம்பிகள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் மின் கசிவு ஏற்பட்டு காட்டுத் தீயாக உருவாகியிருக்கலாம் என்றும் சந்தேகிக்கிறோம்.

கடந்த 2022ஆம் ஆண்டு முதல் லொஸ் ஏஞ்சல்ஸ் பகுதியில் போதிய மழைப்பொழிவு இல்லை. இதனால் பைன் மரங்கள், செடி, கொடிகள் பட்டுப்போயிருந்தன. இது காட்டுத் தீ அதிவேகமாக பரவியதற்கு முக்கிய காரணமாகும்.

சுமார் 200 மைல் தொலைவில் கிரேட் பேசின் பாலைவனம் அமைந்துள்ளது. அங்கிருந்து வரும் வறண்ட காற்று தற்போது லொஸ்ஏஞ்சல்ஸ் நகரை கடந்து செல்கிறது. இந்தக் காற்று வழக்கத்தைவிட அதிவேகமாக சுமார் 80 கி.மீ. வேகத்தில் வீசுகிறது. இதுவும் காட்டுத் தீ வியாபித்துப் பரவியதற்கு முக்கிய காரணமாகும்.

**உதவிக்கரம் நீட்டும் உலக நாடுகள்**

காட்டுத் தீயை அணைக்க கனடா, மெக்சிகோ நாடுகள் உதவிக்கரம் நீட்டியுள்ளன. அமெரிக்க அரசின் ஒட்டுமொத்த கவனமும் லொஸ் ஏஞ்சல்ஸ் மீது திரும்பியிருக்கிறது. இதன் காரணமாக தீயைக் கட்டுப்படுத்துவதில் ஓரளவுக்கு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது.

திடீர் மழை பெய்யவேண்டும். காற்றின் வேகம் குறையவேண்டும். அப்போதுதான் தீயைக் கட்டுப்படுத்த முடியும். இப்போதைய நிலையில் காற்றின் வேகம் குறைய வாய்ப்பில்லை என்று வானிலை மையம் கூறியிருக்கிறது. இயற்கை ஒத்துழைப்பு அளித்தால் தீயை விரைவாக அணைப்போம் என்று அதிகாரிகள் மற்றும் தீயணைப்புத் துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

**குடிநீர் - மின்சாரம் துண்டிப்பு - மக்கள் அவதி**

காட்டுத் தீயை அணைக்க தண்ணீர் தேவைப்படுவதால் சுற்றுவட்டாரப் பகுதிகளில் குடிநீர் விநியோகம் நிறுத்தப்பட்டிருக்கிறது. முன்னெச்சரிக்கையாக பல்வேறு பகுதிகளில் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டிருக்கிறது. இதனால் சுமார் 40 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சூழலில், பலத்த காற்று வீசும் என்று வானிலை ஆய்வு மையங்கள் எச்சரிப்பதால் லொஸ்ஏஞ்சல்ஸ் காட்டுத் தீ பரவல் மென்மேலும் மோசமாகக் கூடுமென அஞ்சப்படுகிறது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7